# தமிழ்

# 4



# தமிழ்

4 ஆம் ஆண்டு

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

| | | |
|---|---|---|
| முதலாம் | பதிப்பு | 1987 |
| இரண்டாம் | பதிப்பு | 1988 |
| மூன்றாம் | பதிப்பு | 1989 |
| நான்காம் | பதிப்பு | 1990 |
| ஐந்தாம் | பதிப்பு | 1991 |
| ஆறாம் | பதிப்பு | 1993 |
| ஏழாம் | பதிப்பு | 1994 |
| எட்டாம் | பதிப்பு | 1995 |
| ஒன்பதாம் | பதிப்பு | 1996 |
| பத்தாம் | பதிப்பு | 1997 |
| பதினொராம் | பதிப்பு | 1998 |

எல்லா உரிமையும் இலங்கை அரசினருக்கே.

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால்
கொழும்பு-13, ஆட்டுப்பட்டித்தெரு,
இல. 195, லக்ஷ்மி அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடப்பட்டது.

98 / ෆෙ / 41 (70,000)

நல்லறம் அறிவான்ற தலைமுறை
நம் நாட்டிலே தோன்றிட
நம் மரசளிக்கும் கொடையிது
நல்வழி காட்டும் நல்லொளியாம் !

உங்கள் பின்வரும்
உடன்பிறவிகள் பொருட்டும்
உணர்வுடன் இதைப்பேணல்
உங்கள் கடனெனக் கொள்வீர் !

அறிவை வளர்த்திடச் சமவுரிமை
அனைவர்க்கும் வழங்கும் நோக்கில்
அரசு தரும் ஏடிதை
அக மகிழ்ந்து ஏற்றிடுவீர் !

நிச்சட் பதிறண
கல்வி, உயர்கல்வி அமைச்சர்.

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே — நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே — நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதோர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல்செறி துணிவருளே — நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே — நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

## நான்முகம்

இந்நூல் 1999 ஆம் ஆண்டு விநியோகத்திற்கென மறு பதிப்புச் செய்யப்பட்டுள்ளது. இப்பதிப்பிற்குப் பல்வேறு வழிகளிலும் உதவிய சகலருக்கும் உள்ளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

ஈ. டபிள்யூ. அபேயநாயக்க
*பதில் கல்வி வெளியீட்டு ஆணையாளர்*

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,
"இசுறுபாய",
பத்தரமுல்லை.
*1998 - 03 - 05*

## முன்னுரை

தமிழ்-ஆண்டு 4 என்னும் இந்நூல், புதிய பாடத்திட்டத்திற்கு அமைய எழுதப்பட்ட தமிழ் நூல் வரிசையில் நானகாவதாகும். சிறுவர்களின் உளவியல், வயது, சூழல், மொழியறிவு என்பவற்றுக்கு அமைய விளக்கப்படங்களுடன் இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. இதில் 22 உரைநடைப் பாடங்களும் 6 செய்யுட் பாடங்களும் அடங்கியுள்ளன. இந்நூலுடன் பயன்படுத்துவதற்குச் செயல்நூல் வேறாக வெளியிடப்பட மாட்டாது. எனவே, செயல்நூலிற் செய்ய வேண்டிய பயிற்சிகள் அனைத்தும் இந்நூலிற் சேர்க்கப்பட்டுள்ளன.

மொழிக் கல்வியில் வாசிப்பும் பேச்சும் எழுத்தும் ஒன்றற்கொன்று நெருங்கிய தொடர்புடையன. இதற்கு ஏற்ற வகையில், வாசிப்பைத் தொடர்ந்து வினாவுக்கு விடை கூறும் பயிற்சியும் அதன்பின் எழுத்துப் பயிற்சியும் இடம்பெறுகின்றன. இந்நூலைக் கற்பிக்கும் அனுபவம் மிக்க ஆசிரியர்களின் ஆலோசனைகள் வரவேற்கப்படும்.

இந்நூலுக்குரிய பாடங்களை எழுதிய எழுத்தாளர்களுக்கும் பாடல்களை அளித்த புலவர்களுக்கும் விளக்கப்படங்களை அழகுறச் சித்திரித்துள்ள ஓவியருக்கும் இந்நூல் சிறப்புற வெளிவருவதற்கு உதவிய ஆலோசகர்களுக்கும் மற்றும் எல்லோருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**எம். கே. ஜே. ஏ. அல்விஸ்**
*கல்வி வெளியீட்டு ஆணையாளரும்*
*பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகமும்.*

*கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,*
*"இசுறுபாய",*
*பத்தரமுல்லை.*

தமிழ் மொழி ஆலோசனைக் குழு

பேராசிரியர் ஆ. சதாசிவம்
கலாநிதி சிரோன்மணி இராசரத்தினம்
கோ. கோணேசபிள்ளை
இராஜேஸ்வரி செல்வரத்தினம்
எம். எச். எம். ஜவ்பர்
புஷ்பா சிவகுமாரன்

நூலாக்கக் குழு

செ. வேலாயுதபிள்ளை
த. கனகரத்தினம்
முக்தார் ஏ முஹம்மது
எ. எச். எம். யூஸுப்
கிருஷ்ணகுமாரி நடராசா

பதிப்பாசிரியர்கள்

எம். ஐ. எஸ். ஏ. கலீல்
இ. விசாகலிங்கம்
வை. எல். எம். றாஸிக்

ஓவியர்

ஆர் பீ. மாவில்மட

அட்டைப் படம்

ஏ. ஜேசுதாசன் (சுதா)

பிரதம பதிப்பாசிரியர்

ஐ. தம்பிமுத்து
இ. சு. நி. சே. தரம் 1

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் ஏலவே வெளியிடப்பட்ட நூல்களைத் தழுவி இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது.

பாடல்களை அளித்த புலவர்களுக்கு நன்றி

# உள்ளுறை


| பாடம் | | பக்கம் |
|---|---|---|
| 1. சூரியனுக்கு நன்றி செலுத்தும் நாள் | ... | 01 |
| 2. இன்பப் பொங்கல் | ... ... | 05 |
| 3. ஔவையாரின் புலமை | ... ... | 07 |
| 4. நீரும் பயிரும் | ... ... | 11 |
| 5. சட்டி குட்டி போடும் என்றால் | ... ... | 15 |
| 6. உயிர்களில் அன்பாயிருத்தல் | ... | 18 |
| 7. நல்ல தீர்ப்பு | ... ... | 20 |
| 8. பாப்பாப் பாட்டு | ... ... | 23 |
| மாதிரி வினாக்கள் | ... ... | 25 |
| 9. வாழை கதை சொன்னால் | ... | 27 |
| 10. விபுலாநந்த அடிகள் | ... ... | 30 |
| 11. தனக்கு வந்தால் தெரியும் | ... | 33 |
| 12. உணவைப் பேணல் | ... ... | 36 |
| 13. புரிந்து கொண்டால்! | ... ... | 40 |
| 14. சுத்தம் சுகம் தரும் | ... ... | 43 |
| 15. ஒரு வழக்கு | ... ... | 46 |
| 16. அபூநவாஸ் | ... ... | 51 |
| 17. பொதுச் சொத்து எங்கள் சொத்து | .... | 54 |
| 18. கத்தரித் தோட்டத்துச் சேவகன் | ... | 57 |
| 19. பந்து சொன்ன கதை | ... ... | 60 |
| மாதிரி வினாக்கள் | ... ... | 63 |
| 20. உயிர் கொடுத்த உத்தமி | ... ... | 65 |
| 21. செங்கல் செய்யும் இடம் | ... ... | 68 |
| 22. கொண்டாடினான் ஒடியற் கூழ் | ... | 71 |
| 23. தாலாட்டுப் பாட்டு | ... ... | 74 |
| 24. யார் பழந் தின்பார்கள் ? | ... ... | 76 |
| 25. குற்றஞ் செய்யாதவர் யார் ? | ... | 80 |
| 26. பாடசாலைத் தோட்டம் | ... ... | 83 |
| 27. உழைப்பில் நேர்மை | ... ... | 87 |
| 28. கொன்றை வேந்தன் | ... ... | 89 |
| மாதிரி வினாக்கள் | ... ... | 91 |

## மாணவர்களுக்கான குறிப்பு

இந்நூலைப் பயன்படுத்தும் மாணவர்கள் 94ஆம் பக்கத்தில் உரிய இடத்திலே தம் பெயரை எழுதுதல் வேண்டும். இந்நூலில் வேறு எந்த இடத்திலும் பென்சிலாலோ, பேனையாலோ எவ்வித அடையாளங்களையும் இடக்கூடாது; எதனையும் எழுதவுங் கூடாது. இந்த நூலை மாணவர்கள் மிகவும் கவனமாகப் பயன்படுத்தல் வேண்டும்.

இந்நூலில் உள்ள சில பயிற்சிகளில் இடைவெளிகளை நிரப்ப வேண்டிய பந்திகள் உள்ளன. அந்தப் பந்திகளை மாணவர்கள் வீட்டு வேலையாக, நூலில் உள்ளவாறு பார்த்துப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுதல் வேண்டும். பின்னர் வகுப்பு வேலையாகப் பயிற்சிப் புத்தகத்தில் உள்ள இடைவெளிகளை நிரப்பலாம்.

# 1. சூரியனுக்கு நன்றி செலுத்தும் நாள்

அன்று தைப்பொங்கலுக்கு முதல் நாள். கண்டியிலிருந்து பாலாவின் வீட்டுக்கு, அவனுடைய சிறிய தந்தையும் சிறிய தாயும் வந்தனர். அவர்களோடு சிறுவன் ஒருவனும் வந்திருந்தான்



சிறிய தந்தை தம்மோடு வந்த சிறுவனைப் பாலாவுக்கு அறிமுகம் செய்தார். ''பாலா, இவரின் பெயர் விமல்; சிங்களவர். இவருடைய பெற்றோர் கண்டியில் எங்கள் வீட்டுக்கு அயலில் வசிக்கின்றனர். அவர்களும் நாங்களும் நல்ல நண்பர்கள். இவர் எங்களோடு இங்கு வர விரும்பினார்; கூட்டிக்கொண்டு வந்தோம். இவர் தமிழும் நன்றாகப் பேசுவார்'' என்றார். பாலாவும் விமலும் ஒருவருக்கு ஒருவர் வணக்கம் தெரிவித்தனர்; நண்பர்கள் ஆயினர்.

பாலாவும் விமலும் சிரித்துப் பேசிக்கொண்டு இருக்கும்பொழுது, பாலாவின் தாய் அவர்களிடம் வந்தார். அவரைத் தொடர்ந்து தந்தையுந் தமையனுந் தங்கையும் அங்கு வந்தனர். அவர்கள் கூடியிருந்து தைப் பொங்கலுக்குரிய ஆயத்தங்கள் பற்றிப் பேசினர்.

அப்பொழுது விமல், ''பாலா, தைப்பொங்கலை நீங்கள் ஏன் கொண்டாடுகிறீர்கள்?'' என்று கேட்டான்.

''விமல், எனக்குமே தெரியாது. சிற்றப்பாவைக் கேட்போம்'' என்று அவன் கூறி, அவரைப் பார்த்தான்.

சிறிய தந்தை சிரித்துக்கொண்டு, ''உழவர் பயிர் செய்வதற்கு மழையும் வேண்டும்; வெயிலும் வேண்டும். அவை பணச் செலவின்றிக் கிடைக்கும் நன்மைகள். அவை எவ்வாறு கிடைக்கின்றன தெரியுமா?'' என்றார்.

''ஆம், தெரியும். அவை சூரியனாலே கிடைக்கும் நன்மைகள்'' என்றான் விமல். ''நல்லது; ஒருவர் நன்மை செய்தால், அதை மறக்கலாமா? நன்றி செலுத்த வேண்டாமா?'' என்றார் அவர். அதற்குப் பாலா, ''நிச்சயமாய் நன்றி செலுத்த வேண்டும். நன்றி மறப்பது நன்று அன்று'' என்றான்.

''ஆகவே, உழவர் தமக்கு நன்மை செய்த சூரியனுக்கு நன்றி செலுத்துகின்றனர். அவர்கள் நன்றி செலுத்தும் நாளே தை மாதத்து முதல் நாள்; தைப்பொங்கல் நாள். அந்நாளிலே, பொங்கல் பொங்கிச் சூரியனுக்குப் படைக்கின்றனர்; அந்நாளைத் திருநாளாகக் கொண்டாடுகின்றனர்'' என்றார் சிறிய தந்தை.

உடனே விமல், ''அப்படியானால் தை மாதத்து முதல் நாளிலேதான் கொண்டாட வேண்டுமா? வேறொரு நாளிற் கொண்டாடினால் என்ன?'' என்று கேட்டான்.

அதற்குப் பாலாவின் தந்தை, ''நல்ல கேள்வி விமல். தையிலே பெரும்பாலும் நெல் விளைந்துவிடும். கரும்பு முற்றிவிடும். கிழங்கு வகைகள் விளைந்துவிடும். ஏனைய பயிர்களும் பயன் தரத் தொடங்கிவிடும். பொங்கல் இடுவதற்கு இவை வேண்டும். அதனால், தை மாதத்து முதல் நாளில் உழவர் தைப் பொங்கலைக் கொண்டாடு கின்றனர்'' என்றார்.

அப்பொழுது பாலா, ''அப்பா, தைப் பொங்கல் உழவர்களின் திருநாள் என்று சிற்றப்பா சொன்னார். ஆனால், அதைத் தொழிலாளர், வியாபாரிகள், உத்தி யோகத்தர் ஆகிய எல்லோரும் கொண்டாடுகிறார் களே! ஏன் அப்பா?'' என்று கேட்டான். விமலும், ''அப்படியா? அதற்குக் காரணம் என்ன?'' என்று கேட்டான்.

''அதற்குக் காரணம் உண்டு விமல். மக்கள் உயிர் வாழ உணவு வேண்டும். அந்த உணவை உண்டாக்கித் தருகிறவர்கள் உழவர்கள். உழவுத் தொழிலுக்கு வேண் டிய வெயிலையும் மழையையும் தருகிறவன் சூரியன். உழவருக்குஞ் சூரியனுக்கும் நன்றி செலுத்துவதற்காக, மற்றையவர்களும் தைப்பொங்கலைக் கொண்டாடு கிறார்கள்'' என்று, தந்தை கூறினார்.

## பயிற்சி

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. பாலாவின் சிறிய தந்தையார் வாழ்ந்த இடம் எது?
2. அவருடன் வந்த சிறுவனின் பெயர் என்ன?
3. வெயிலும் மழையும் எதனாற் கிடைக்கின்றன?
4. உழவர்கள் தைப்பொங்கலை ஏன் கொண்டாடுகின் றார்கள்?
5. ஏனையோர் அதனை ஏன் கொண்டாடுகின்றார்கள்?

ஆ. பின்வருவனவற்றை வாக்கியங்களாக நிறைவுசெய்து பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்:

1. பாலாவின் சிறிய தந்தையார் கண்டியிலிருந்து . . . . . . . . . . . . . . .
2. பாலாவும் விமலும் அன்பாக . . . . . . . . . . . . . . . .
3. உழவன் சூரியனுக்கு நன்றி . . . . . . . . . . . . . . .
4. தை மாதத்தில் நெல் . . . . . . . . . . . . . . .
5. நாங்கள் தைப்பொங்கல் . . . . . . . . . . . . . . .

இ. அடைப்புக் குறிக்குள் இருப்பவற்றிற் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து வாக்கியமாக எழுதுங்கள்:

1 (பாலா, விமல், விமலின் பெற்றோர்) கண்டியில் வசிக்கின்றனர்.
2. (சிறுவன், சிறுமி, பெற்றோர்) பாலாவுடன் சிரித்துப் பேசினான்.
3. (நாங்கள், நீங்கள், சிறிய தந்தையார்) ஏன் தைப் பொங்கலைக் கொண்டாடுகிறீர்கள்?
4. (நாங்கள், வியாபாரிகள், உத்தியோகத்தர்) சூரியனுக்கு நன்றி செலுத்துவோம்.
5 (தந்தை, விமல், தங்கை) அங்கு வந்தாள்.

## 2. இன்பப் பொங்கல்

தைத்திருநாள் இல்லமெலாம்
தளிர்த்திடும் தைப்பொங்கல்.
இத்தனைநாள் காத்திருந்தோம்
இனியதமிழ்ப் பொங்கல்

கோலமிட்டு விளக்கேற்றிக்
கும்பிடுவார் அம்மா.
பாலெடுத்துப் பொங்கலுக்குப்
பானைவைப்பார் அப்பா.

விரும்பியமா வாழைபலா
விதவிதமாய்க் கனிகள்
கரும்பிளநீர் படைத்துமனம்
களித்திடுவோம் நாங்கள்.

வெண்ணிறப்பால் பொங்கிவர
வெடிசுடுவோம் நாங்கள்.
இன்னமுதப் பொங்கலுண்ண
இணைந்துநிற்போம் நாங்கள்

''அம்பி''

### பயிற்சி

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. *தமிழர் பொங்கல் விழாவை எந்த மாதத்திற் கொண்டாடுகின்றனர்?*
2. *அன்று அம்மா செய்யும் வேலைகள் எவை?*
3. *பொங்கலுக்குப் பால் எடுத்துப் பானை வைப்பவர் யார்?*

4. பானையிலே பால் பொங்கி வரும்பொழுது சிறுவர்கள் என்ன செய்வார்கள்?
5. பொங்கலுக்குப் படைக்கும் பொருள்கள் எவை?

ஆ. அடைப்புக் குறிக்குள் இருப்பவற்றிற் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து, வாக்கியமாகப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்:

1. நாங்கள் தைப்பொங்கல் (கொண்டாடுவோம், கொண்டாடுவார்கள், கொண்டாடுவீர்கள்)
2. கமலா விளக்கேற்றி (வணங்குவார்கள், வணங்குவான், வணங்குவாள்)
3. நீ இளநீர் (குடியுங்கள், குடி, குடிப்பீர்)
4. பால் பொங்கி (வந்தன, வந்த, வந்தது)
5. அவன் பொங்கல் (உண்டான், உண்டார்கள், உண்டாள்)

இ. பின்வருவனவற்றை வாக்கியங்களாக நிறைவுசெய்து பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்:

1. ........................ பொங்கல் விழாவைக் கொண்டாடுவோம்.
2. ........................ பானை வைப்பார்.
3. ........................ தை மாதத்தில் விளையும்.
4. ........................ பால் குடித்தீர்கள்.
5. ........................ பொங்கல் உண்ண வருவார்கள்.

ஈ. பின்வருவனவற்றைப் பிரித்து எழுதுக:

1. விளக்கேற்றி
2. பாலெடுத்து
3. கரும்பிளநீர்
4. பொங்கலுண்ண
5. காத்திருந்தோம்

# 3. ஔவையாரின் புலமை

''என்ன பாலா, வரம்பிலே சறுக்கி விழுந்து விட்டாயா?''

''ஆம் அப்பா''

''இவை உயரமான வரம்புகள். கவனமாக நடந்து வா'

''ஏன் அப்பா, இப்படி உயரமாக வரம்புகளைக் கட்டி யிருக்கிறார்கள்? உயரம் இல்லாமல் அகலமாகக் கட்டி னால் என்ன? அகலமாய் இருந்தால், கண்ணை மூடிக் கொண்டு ஓடிப் போகலாமே!''


''வயல் வரம்புகளை அகலமாகக் கட்டுவதில்லை. இப் படி உயரமாகத்தான் கட்ட வேண்டும். அப்பொழுது தான் வயலில் நீர் நிறைந்து நிற்கும். நீர் நிறைந்து நின்றால் நெல் செழித்து வளரும்.''

''அப்படியா அப்பா?''

''ஆம் பாலா; ஔவைப் பாட்டியும் அப்படித்தான் சொல்லியிருக்கின்றார்''

''ஔவைப் பாட்டியா? அப்பா, அவர் என்ன சொல்லி யிருக்கிறார்?''

''ஔவையார் சிறந்த தமிழ்ப் புலவர். அவர் ஏழை களோடும் பழகினார்; அறிவாளிகளோடும் பழகினார் அரசர்களோடும் பழகினார். ஏழைகள் அவரை அன் போடு ஔவைப் பாட்டி என்று அழைத்தனர். அறி வாளிகளும் அரசர்களும் அவரை மரியாதையோடு ஔவையார் என்று அழைத்தனர்.



ஒரு நாள் ஔவையார் அரசன் ஒருவனுடைய சபைக்குச் சென்றார். அச்சபையில் அரசனும் புலவர்களும் வீற்றிருந்தனர். ஔவையாரைக் கண்டதும் அரசன் எழுந்து வரவேற்றான்; அவரை ஆசனத்தில் அமரும்படி வேண்டினான். ஔவையார் புலவர்களுக்கு மத்தியில் ஓர் ஆசனத்தில் அமர்ந்தார். அப்பொழுது அங்கிருந்த புலவர்கள் அரசனை வாழ்த்தத் தொடங்கினர். அவர்களிற் சிலர் எழுந்து நின்று, அரசனைப் பார்த்து, 'சந்திரனைப் போன்றவனே, வாழ்க' என்று வாழ்த்தினர்; சிலர் 'இந்திரனைப் போன்றவனே, வாழ்க' என்று வாழ்த்தினர். சிலர், 'காமதேனுவைப் போன்றவனே, வாழ்க' என்று வாழ்த்தினர். கடைசியாக ஔவையார் எழுந்தார்; அரசனைப் பார்த்து 'வரப்புயர' என்று மட்டும் வாழ்த்திவிட்டு அமர்ந்தார். ஔவையார் வாழ்த்தியது அரசனுக்கும் விளங்கவில்லை; புலவர்களுக்கும்

விளங்கவில்லை. எல்லோரும் திகைத்தனர். அப்போது ஒளவையார் பொக்கை வாயைத்திறந்து சிரித்தார். மீண்டும் எழுந்தார்.

வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக் குடி உயரும்
குடி உயரக் கோன் உயரும்

என்று முழு வாழ்த்தையுங் கூறினார். அரசனும் புலவர்களும் அவருடைய திறமையைக் கண்டு மகிழ்ந்தனர்; அவரைப் பாராட்டினர்.

''அப்பா, வரப்பு என்றால் வரம்பு; குடி என்றால் என்ன? கோன் என்றால் என்ன?''

''குடி என்றால் நாட்டு மக்கள்; கோன் என்றால் அரசன்'' என்றார் தந்தையார்.

''இப்பொழுது எனக்குக் கதையும் தெரியும்; பாட்டும் தெரியும் அப்பா'' என்றான் பாலா.

## பயிற்சி

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. பாலா எங்கே சறுக்கி விழுந்தான்?
2. வயல் வரம்புகள் எவ்வாறு கட்டப்பட்டிருக்கும்?
3. அரசனுக்கு ஒளவையார் கூறிய வாழ்த்து என்ன?
4. குடி என்ற சொல்லின் பொருள் என்ன?
5. கோன் என்பவன் யார்?

ஆ. பின்வரும் வாக்கியங்களிலே தடித்த எழுத்துக்களில் உள்ள சொற்களுக்குப் பதிலாக, இங்கே தந்துள்ள பொருத்தமான சொற்களை இட்டுப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்.

சிறுவர்கள், விழுந்தார்கள், உழவன், கட்டினான், அரசர்கள், மகிழ்ந்தனர், அரசன், அழைத்தான், புலவன், பாராட்டினான்.

1. சிறுவன் வரம்பிலே சறுக்கி விழுந்தான்.
உ-ம்: சிறுவர்கள் வரம்பிலே சறுக்கி விழுந்தார்கள்.
2. உழவர்கள் வரம்பை உயரமாகக் கட்டினார்கள்.
3. ஔவையாருடைய புலமையைக் கண்டு அரசன் மகிழ்ந்தான்.
4. அரசர்கள் அவரை மரியாதையோடு ஔவையார் என அழைத்தனர்.
5. புலவர்கள் ஔவையாரைப் பாராட்டினார்கள்.

இ. பின்வரும் பந்தியிலே தடித்த எழுத்தில் உள்ள சொற்களுக்குப் பதிலாக, இங்கே தந்துள்ள பொருத்தமான சொற்களை இட்டுப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்:

உதாரணம்: நாங்கள் என்பதற்குப் பதிலாக நீங்கள்.

நீங்கள், வளர்ப்பீர்கள், உங்களுக்குப், உண்டு, உங்களுக்கு, இருக்கின்றது, கொடுக்கவல்லது, தெய்வீகப் பசு.

**நாங்கள்** பசுவை வீட்டில் **வளர்ப்போம்**. அது **எங்களுக்குப்** பால் தரும். பால் சத்துள்ள உணவு. பால் தரும் பசுவுக்குக் கன்றும் **இருக்கும்**. கன்று துள்ளி விளையாடும். பசுவின் கழிவுகள் தோட்டத்துக்கும் வயலுக்கும் நல்ல பசளையாகும். எனவே பசுவினால் **எங்களுக்கு** நல்ல பயன் கிடைக்கின்றது.

தேவர்களின் உலகத்திலும் பசு ஒன்று **உள்ளது**. அதன் பெயர் காமதேனு. அது தன்னிடங் கேட்கும் பொருள்கள் எல்லாவற்றையுங் **கொடுக்கக் கூடியது**. அதன் உடல் பசுவின் உடல் போலவும், முகம் பெண்ணின் முகம் போலவும் இருக்கும் அது **தெய்வப் பசு** எனப்படும்


# 4. நீரும் பயிரும்

கணேசன் கண்டியிலுள்ள ஒரு பாடசாலையிற் படித்து வந்தான். அவனுடைய பெற்றோர் கந்தளாயில் வாழ்ந்தனர். அவர்களுக்கு அங்கு நெல் வயல்களுங் கரும்புத் தோட்டங்களும் இருந்தன. விடுமுறைக் காலத்திலே கணேசன் தனது ஊராகிய கந்தளாய்க்குச் செல்வது வழக்கம்.

ஒரு முறை கணேசன் குமரனையுஞ் சமீமையுந் தேவநேசனையுந் தன்னுடன் ஊருக்குக் கூட்டிக்கொண்டு போனான். மூவரும் மலைநாட்டைச் சேர்ந்தவர்கள்; அவனுடைய வகுப்புத் தோழர்கள். அவர்கள் எல்லோரையுங் கணேசனின் பெற்றோர் அன்புடன் வரவேற்றனர். காலை உணவின் பின் அவர்கள் கந்தளாய்ப் பகுதியைச் சுற்றிப் பார்க்கச் சென்றனர்.

''அடேயப்பா! இவ்வளவும் வயல்களா! பச்சைப் பசேல் என்று பரந்து கிடக்கின்றனவே!'' என்று கூறிக் கணேசனின் தோழர்கள் ஆச்சரியப்பட்டனர்; சிறிது அப்பாற் சென்றனர். அங்கே கரும்புத் தோட்டங்கள் காணப்பட்டன. அவற்றிலே கரும்புகள் செழித்து வளர்ந்திருந்தன. அவை காற்றில் அசைந்து ஆடின. ''கரும்பை நினைத்தாலே வாய் ஊறுகின்றது'' என்று தேவநேசன் மெல்லச் சொன்னான்.

''இது எங்கள் அப்பாவின் கரும்புத் தோட்டம்; நில்லுங்கள்; உங்களுக்கு ஒவ்வொரு கரும்பு வெட்டித் தருகிறேன்'' என்று கூறினான் கணேசன்; எல்லோருக்கும் ஒவ்வொரு கரும்பு வெட்டிக் கொடுத்தான். அவர்கள் கரும்பைக் கடித்துச் சுவைத்தனர்



''இந்தக் கரும்புத் தோட்டத்துக்கும் வயல்களுக்கும் நிறைய நீர் வேண்டுமே! இந்த நீர் எவ்வாறு கிடைக்கின்றது?'' என்று சமீம் கேட்டான். ''அதோ தெரிகிறதே பெரிய நீர்ப்பரப்பு; அதுதான் கந்தளாய்க் குளம்; அதிலிருந்துதான் அவற்றுக்கு நீர் கிடைக்கின்றது'' என்றான் கணேசன். இவ்வாறு பேசிக்கொண்டே அவர்கள் கந்தளாய்க் குளக்கட்டை அடைந்தார்கள். ''இந்தக் குளத்தை எப்படித்தான் கட்டினார்களோ! இவ்வளவு பெரிய குளத்தைக் கட்டியவர் யார்?'' என்று கேட்டான் குமரன்.

''கந்தளாய்க் குளத்தைக் குளக்கோட்டன் என்ற அரசன் கட்டினான் என்று கூறுங் கதை ஒன்று உண்டு. 'குளக்கோட்ட மன்னன் கோணேசர் கோயிலைக் கட்டினான்; தம்பலகாமத்திலே கோயிலுக்கு வேண்டிய வயல் நிலங்களை வழங்கினான். அந்த வயல்களுக்கு நீரைப் பாய்ச்சக் குளம் ஒன்று தேவைப்பட்டது. எனவே பூதங்களைக் கொண்டு கந்தளாய்க் குளத்தைக் கட்டுவித்தான்' என்று அக்கதை கூறுகின்றது''ஆயின், கி.பி. 608 முதல் கி.பி. 618 வரை இலங்கையில் ஆட்சி செய்த இரண்டாம் அக்கபோதி மன்னனே இதனைக் கட்டுவித்தான், என்பது வரலாற்று ஆசிரியர் கூற்று.'' என்றான் கணேசன்.

''பென்னம்பெரிய குளம்! பென்னம்பெரிய **அணைக்** கட்டு! இதைக் கட்டி முடிப்பது எளிதான காரியமில்லை; அதனாலேதான், பூதங்கள் கட்டியதாகக் கூறுகிறார்களோ?'' என்று தேவநேசன் கூறினான்.

இவ்வாறு கூறிக்கொண்டு செல்லும்பொழுது அவர்கள் சீனித் தொழிற்சாலையை அடைந்தனர். அதனைப் பார்த்து முடிந்தவுடன் எல்லோரும் கணேசனின் வீட்டுக்குச் சென்றனர்.

## பயிற்சி

**அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:**

1. கணேசனின் பெற்றோர் வாழ்ந்த இடம் எது?
2. அவன் எவ்வாறு குமரனையும் சமீமையும் தேவநேசனையும் அறிந்திருந்தான்?
3. கந்தளாய்க் குளத்தைக் கட்டியவன் யார்?
4. அதனைக் கட்டியதற்கான காரணம் என்ன?
5. சீனித் தொழிற்சாலை எங்கே அமைந்துள்ளது?

**ஆ. பின்வருவனவற்றிலுள்ள இடைவெளிகளை நிரப்பிப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்:**

உதாரணம்:

கணேசன் நேற்றுப் பாடசாலைக்குச் .....(செல்)
கணேசன் இன்று பாடசாலைக்குச் .....(செல்)
கணேசன் நாளைக்குப் பாடசாலைக்குச் ...(செல்)
கணேசன் நேற்றுப் பாடசாலைக்குச் சென்றான்.
கணேசன் இன்று பாடசாலைக்குச் செல்கின்றான்.
கணேசன் நாளைக்குப் பாடசாலைக்குச் செல்வான்.

I (1) குமரன் நேற்றுக் கோயில் ...... (கட்டு)
(2) குமரன் இன்று கோயில் .......(கட்டு)
(3) குமரன் நாளைக்குக் கோயில் ... (கட்டு)

II (1) தேவநேசன் நேற்றுக் கரும்பு. . . (வெட்டு)

(2) தேவநேசன் இன்று கரும்பு . . . . (வெட்டு)

(3) தேவநேசன் நாளைக்குக் கரும்பு. (வெட்டு)

III (1) சமீம் நேற்றுக் கண்டியிலிருந்து . . . . (வா)

(2) சமீம் இன்று கண்டியிலிருந்து . . . . . (வா)

(3) சமீம் நாளைக்குக் கண்டியிலிருந்து. . (வா)

இ. பின்வருவனவற்றை வைத்து வாக்கியம் எழுதுக.

1. பென்னம் பெரிய
2. பச்சைப் பசேல்
3. கன்னங் கரிய
4. மெல்ல மெல்ல
5. சின்னஞ் சிறிய

## 5. சட்டி குட்டி போடும் என்றால்......

மத்திய ஆசியாவில் நஸ்ருதீன் முல்லா என்னும் விகட கவி ஒருவர் வாழ்ந்தார் அவருடைய விகடப் பேச்சு எல்லோரையுஞ் சிரிக்கச் செய்ததோடு சிந்திக்க வுஞ் செய்தது.

முல்லாவின் அயல்வீட்டுக்காரர் ஒருநாள் அவருடைய வீட்டுக்கு வந்தார். அவர் "எங்கள் வீட்டுக்கு விருந் தினர் வந்திருக்கின்றனர்; உணவு சமைக்க உங்கள் சட்டி களைத் தாருங்கள்" என்று கேட்டார். அவர் கேட்ட சட்டிகள் எல்லாவற்றையும் முல்லா கொடுத்தார்.

சில நாள்கள் கழிந்தன. அயல்வீட்டுக்காரர் முல்லா விடம் வந்தார். அவர் தாம் எடுத்துச்சென்ற சட்டிகளு டன் ஒரு சிறிய சட்டியையுங் கொண்டு வந்திருந்தார். அப்பொழுது முல்லா அந்தச் சிறிய சட்டியை வியப் புடன் பார்த்தார். ''இந்தச் சிறிய சட்டி என்னுடைய தன்று; இதனை ஏன் கொண்டுவந்தீர்'' என்று அவர் அயல்வீட்டுக்காரரைக் கேட்டார். ''நீங்கள் தந்த சட்டி கள் போட்ட குட்டி இது. சட்டப்படி இது உங்களுக்கே உரியது'' என்று அயல்வீட்டுக்காரர் வேடிக்கையாக விடை கூறினார். முல்லா இயற்கையாகவே விகடமாகப் பேசுபவர். அவர் அயல்வீட்டுக்காரரின் விகடப் பேச் சைக் கேட்டுத் திணறிவிடுவாரா?

சில நாள்கள் கழிந்த பின்னர் முல்லா அயல்வீட்டுக் காரரிடஞ் சென்றார். ''எங்கள் வீட்டுக்கு விருந்தினர் வந்திருக்கின்றனர்; உணவு சமைக்க உங்கள் சட்டிகளைத் தாருங்கள்'' என்று அவர் கேட்டார். அயல்வீட்டுக் காரர் முல்லா கேட்ட சட்டிகள் எல்லாவற்றையுங் கொடுத்தார். முல்லா அவற்றை எடுத்துக் கொண்டு தம் வீட்டுக்குச் சென்றார்.

பல நாள்களாகியும் முல்லா அச்சட்டிகளைத் திருப்பிக் கொடுக்கவில்லை. எனவே, அயல்வீட்டுக்காரர் முல்லாவின் வீட்டுக்குச் சென்றார். முல்லா அவரைக் கண்டவுடன், "என்ன இன்று திடீரென வந்திருக்கிறீர்" என்று கேட்டார். அப்பொழுது அயல்வீட்டுக்காரர் "ஒன்றுமில்லை. நீங்கள் என்னிடம் எடுத்துவந்த சட்டிகளை இன்னமுந் திருப்பித் தரவில்லையே. அவற்றை எடுத்துச் செல்வதற்காக வந்தேன்'' என்று கூறினார். ''ஐயையோ, அவற்றைத் திருப்பிக்கொண்டு செல்லவா வந்தீர்கள்? அவை இறந்து மூன்று நாள்கள் கழிந்து விட்டனவே'' என்று முல்லா பதிலளித்தார்.'' ''என்ன! சட்டிகளுமா இறக்கும்?'' என்று அயல்வீட்டுக்காரர் வியப்புடன் முல்லாவைக் கேட்டார். ''சட்டி குட்டி போடும் என்றால், அவை இறப்பதில் என்ன அதிசயம்?'' என்று முலலா விடை கூறினார். அப்பொழுதுதான் அயல் வீட்டுக்காரர் தாம் முல்லாவுக்குச் செய்த குறும்பின் விளைவு இது என்பதனை உணர்ந்தார். அவர் வெட்கத்தினாலே தலை குனிந்தார்.

## பயிற்சி

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. நஸ்ருதீன் முல்லா வாழ்ந்த இடம் எது?
2. அயல்வீட்டுக்காரர் குட்டிச் சட்டி கொண்டுவந்ததற்குக் காரணம் என்ன?
3. முல்லாவின் வீட்டுக்கு விருந்தினர் வந்தனர் என்பது உண்மையா?
4. அயல்வீட்டுக்காரர் சட்டிகளைத் திருப்பிக் கேட்டபொழுது முல்லா என்ன பதில் சொன்னார்?
5. சட்டிகள் உண்மையில் இறந்தனவா?

ஆ. பின்வரும் வாக்கியங்களைக் கேள்விகளாக மாற்றுங்கள் :

**உதாரணம்**. சட்டிகள் குட்டி போடும்.
சட்டிகள் குட்டி போடுமா?

1. அயல்வீட்டுக்காரர் சட்டியை வாங்கினார்.
2. குட்டியைக் கண்டு முல்லா வியப்புற்றார்.
3. விருந்தினர் முல்லாவின் வீட்டுக்கு வந்தனர்.
4. சட்டிகள் மூன்று நாள்களுக்கு முன் இறந்தன.
5. குட்டி போடுஞ் சட்டிகள் இறக்கும்.

இ முல்லாவைப் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுங்கள்.

# 6. உயிர்களில் அன்பாயிருத்தல்

முற்காலத்திலே பாரத நாட்டின் வட பகுதியிலே சுத்தோதனர் என்னும் பெயருடைய அரசர் வாழ்ந்தார். அவருக்குச் சித்தார்த்தர் என்னும் பெயருடைய புத்திரர் ஒருவர் இருந்தார். சித்தார்த்தரின் விளையாட்டுத் தோழன் தேவதத்தன். அவன் சித்தார்த்தரின் உறவினன். இருவரும் அரண்மனைத் தோட்டத்தில் விளையாடுவது வழக்கம்.

ஒருநாள் அவ்வாறு விளையாடும்பொழுது தோட்டத்தின் மேலாக அன்னப் பறவைகள் பறந்து சென்றன. தேவதத்தன் வேட்டையில் விருப்பமுள்ளவன். அவன் தனது வில்லில் அம்பைத் தொடுத்து ஒரு பறவைக்கு எய்தான். அந்த அன்னம் அம்பினால் அடிபட்டுச் சித்தார்த்தருக்கு முன்னால் விழுந்தது. அது நோவினாலே துடிதுடித்து மூச்சுத் திணறியது. அதனுடைய உடல் நடுங்கியது.

சித்தார்த்தர் உயிர்களிடத்தில் அன்பு உள்ளவர். அந்தச் சிறிய பறவையின் துன்பத்தைக் கண்டு அவர் மனம் இரங்கினார்; அப்பறவையின் முதுகை அன்போடு தடவினார்; காயம் பட்ட இடத்திலிருந்து அம்பை மெதுவாகப் பிடுங்கினார்; காயத்தில் மருந்து வைத்துக் கட்டினார். அன்னம் உயிர் தப்பியது.

தேவதத்தன் விழுந்த அன்னத்தைத் தேடிக்கொண்டு வந்தான். அந்த அன்னம் சித்தார்த்தரிடம் இருப்பதைக் கண்டான். அவன் சித்தார்க்தரைப் பார்த்து, 'அன்னத்தை என்னிடம் கொடுத்து விடு. இதை நானே அம்பெய்து வீழ்த்தினேன். இது எனக்கே சொந்தம்' என்று வாதாடினான் உயிர் தப்பவைத்த எனக்கே அன்னம் உரியது' என்று சித்தார்த்தர் கூறினார்.

இருவரும் நீதிமன்றத்துக்குச் சென்றனர். தேவதத்தன் நீதிமன்றத்தில் முறையிட்டான். சித்தார்த்தரே அன்னத்துக்கு உயிர் கொடுத்தவர். தேவதத்தனோ அதனைக் கொல்ல முயன்றவன். உயிரைக் காப்பாற்றியவருக்கே

அன்னம் உரியது என்று நீதிமன்றத்திலே தீர்ப்புக் கூறப்பட்டது. **சித்தார்த்தர் அன்னப்** பறவையைத் தமது அன்பின் பரிசாகப் பெற்றார். அவர் புகழ் நாடெங்கும் பரவியது. அவர் உயிர்களில் அன்பாக இருக்க வேண்டும் என்று போதித்தார். அவர் பெரிய துறவியானார். அவரே கௌதம புத்தர் என்பவராவர். பௌத்த சமயம் அவரினாலே தோற்றுவிக்கப்பட்டது

## பயிற்சி

**அ. பின்வருவனவற்றிற்கு விடை கூறுங்கள்:**

1. புத்தபெருமானுக்கு அவருடைய பெற்றோர் இட்ட பெயர் என்ன?
2. சித்தார்த்தரின் விளையாட்டுத் தோழன் யார்?
3. அன்னப் பறவைக்கு அம்பெய்தவன் யார்?
4. சித்தார்த்தர் தமக்கு முன்னால் விழுந்த பறவையை என்ன செய்தார்?
5. வழக்கின் தீர்ப்பு என்ன?

**ஆ. பின்வருவனவற்றை வாக்கியங்களாக நிறைவுசெய்து பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்:**

உதாரணம்:

1. தேவதத்தன் வேட்டையில் விருப்பமுடையவன்
2. சித்தார்த்தர் உயிர்களிடத்தில் . . . . . . . . . . . . .
3. இருவரும் நீதிமன்றத்துக்குச் . . . . . . . . . . . . .
4. அரசன் நாட்டை . . . . . . . . . . . . . . .
5. அன்னத்தை என்னிடம் . . . . . . . . . . . . . . .

**இ. இங்கே தரப்பட்டுள்ள சொற்களை வாக்கியம் ஆக்கிப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்:**

1. தேவதத்தன் / முறையிட்டான் / நீதிமன்றத்தில்
2. கௌதம புத்தர் / தோற்றுவித்தார் / பௌத்த சமயத்தை.
3. சித்தார்த்தரின் / தேவதத்தன் / உறவினன்
4. உயிர் / பிழைத்தது / அன்னம்
5. தடவினார் / சித்தார்த்தர் / அன்னத்தைத்

# 7. நல்ல தீர்ப்பு

முற்காலத்தில் மரியாதை இராமன் என்னும் பெரியார் ஒருவர் இருந்தார். அவர் சிறந்த புத்திசாலி: நன்றாகப் படித்தவர்; வழக்குகளை விசாரிப்பதில் வல்லவர்; சாட்சிகள் இல்லாவிட்டாலும் குற்றவாளிகளைக் கண்டுபிடித்துவிடுவார்.

ஒருநாள் ஒருத்தி மிகுந்த துக்கத்தோடு மரியாதை இராமனிடம் சென்றாள். அவள் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது. அவள் அவரை வணங்கி, ''பிரபு, நான் வளர்த்த கோழிகளில் ஒன்று எதிர் வீட்டில் நுழைந்தது. அதை நான் என் கண்களாற் கண்டேன்; ஆனால், அங்கே சென்ற கோழி திரும்பி வரவில்லை. எதிர் வீட்டுக்காரி அதைக் கொன்று தின்றிருக்க வேண்டும். பிரபு, நான் ஓர் ஏழை. ஆகையால், கோழியின் பெறுமதியை அவளிடமிருந்து வாங்கித் தர வேண்டும்'' என்றாள்.

உடனே, மரியாதை இராமன் அந்த எதிர் வீட்டுக்காரியை அழைப்பித்தார்; அவளிடம் கோழிக்காரியின் முறைப்பாட்டைக் கூறினார். ''இவளுடைய கோழி உன் வீட்டுக்குள் நுழைந்ததா? நீ அதைக் கண்டாயா?'' என்று விசாரித்தார்.

அதற்கு அவள், ''பிரபு, இவளுடைய கோழி என்னுடைய வீட்டுக்குள் வரவே இல்லை. சத்தியமாய் அதை நான் காணவே இல்லை. காணாத கோழியை எப்படி நான் பிடிக்க முடியும்? இவள் பொய் சொல்லுகிறாள்; வீண்பழி சுமத்துகிறாள்'' என்று கூறினாள்; கண்ணீர் விட்டு அழுதாள்.

''உன் கோழி எதிர் வீட்டுக்குள்ளே போனதைக் கண்டவர் யார்? அப்படிக் கண்டதற்குச் சாட்சிகள் உண்டா?'' என்று மரியாதை இராமன் கோழிக்காரியைக் கேட்டார்.

அதற்கு அவள் ''பிரபு, என்னைத் தவிர, அதைக் கண்டவர்கள் வேறு யாரும் இல்லை'' என்றாள்.

மரியாதை இராமன் சிறிது நேரம் யோசித்தார். பின்பு, ''சாட்சிகள் இல்லாதபடியால், வழக்குத் தள்ளப் படுகிறது. நீங்கள் போகலாம்'' என்றார். எதிர்வீட்டுக் காரி மிக்க மகிழ்ச்சியோடு வெளியே சென்றாள்; கோழிக் காரி மிக்க துக்கத்தோடு சென்றாள்.

அவர்கள் வெளியே செல்லும்போது, மரியாதை இரா மன் திடீரென, ''அதோ, கோழியின் இறகு அவளுடைய தலையிலே இருக்கிறதே'' என்று கூறினார்.

எதிர் வீட்டுக்காரி நடுநடுங்கினாள்; திரும்பிப் பார்த் தாள்; கோழி இறகு இருப்பதாக எண்ணித் தன் தலையைத் தடவினாள்.



மரியாதை இராமன் செய்த தந்திரம் பலித்துவிட்டது. அவர், அந்தப் பெண்கள் இருவரையும் திரும்பவும் வரும்படி கூப்பிட்டார்.

கோழிக்காரி சிரித்த முகத்தோடு மரியாதை இரா மனிடம் சென்றாள். எதிர்வீட்டுக்காரி நடுநடுங்கிக் கொண்டு சென்றாள். அவள் தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டாள். அவள் கோழிக்குரிய பெறுமதியைக் கொடுக்க வேண்டியதாயிற்று.

## பயிற்சி

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. மரியாதை இராமனிடம் இருந்த கெட்டித்தனம் என்ன?
2. அவரிடஞ் செய்யப்பட்ட முறையீடு யாது?
3. இம்முறையீட்டிற் கூறப்பட்ட குற்றவாளியைக் கண்டுபிடிப்பதில் இருந்த பிரச்சினை என்ன?
4. கோழி திருடியவளை மரியாதை இராமன் எவ்வாறு கண்டுபிடித்தார்?
5. எதிர்வீட்டுக்காரி ஏன் தன் தலையைத் தடவினாள்?


ஆ. பின்வருங் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும் பிழை யாயின் பிழை எனவும் கூறுங்கள்:

1. மரியாதை இராமன் வழக்குகளை விசாரிப்பதில் வல்லவர் அல்லர்.
2. எதிர்வீட்டுக்குச் சென்ற கோழி திரும்பி வரவில்லை.
3. எதிர்வீட்டுக்காரி தான் கோழியைக் காணவே இல்லை என்றாள்.
4. கோழி எதிர்வீட்டுக்குப் போனதை ஒருவருமே காண வில்லை.
5. மரியாதை இராமன் கோழி திருடியவளைக் கண்டு பிடிக்கவில்லை.

இ. பொருத்தமானவற்றைச் சேர்த்து அப்பியாசப் புத்த கத்தில் வாக்கியமாக எழுதுங்கள்:

1. (நீ, நீங்கள்) போனாய்.
2. (நான், நாம்) வாங்கினோம்.
3. (அவன், அவள்) வந்தாள்.
4. (அவை, அவர்கள்) சென்றன.
5. (அவை, அது) பறந்தது.

# 8. பாப்பாப் பாட்டு



1. ஓடி விளையாடு பாப்பா ! - நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா !
கூடி விளையாடு பாப்பா ! - ஒரு
குழந்தையை வையாதே பாப்பா !

2. கொத்தித் திரியுமந்தக் கோழி - அதைக்
கூட்டி விளையாடு பாப்பா !
எத்தித் திருடுமந்தக் காக்கை - அதற்கு
இரக்கப் படவேணும் பாப்பா !

3. பாலைப் பொழிந்து தரும், பாப்பா ! - அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா !
வாலைக் குழைத்துவரும் நாய்தான் - அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா !

4. காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு!
மாலை முழுதும் விளையாட்டு - என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா !

5. பொய்சொல்லக் கூடாது பாப்பா - என்றும்
புறஞ்சொல்ல லாகாது பாப்பா !
தெய்வம் நமக்குத்துணை பாப்பா ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா !

6. துன்பம் நெருங்கி வந்த போதும் - நாம்
சோர்ந்துவிட லாகாது பாப்பா !
அன்பு மிகுந்ததெய்வ முண்டு - துன்பம்
அத்தனையும் போக்கிவிடும் பாப்பா !

வைதல் – ஏசுதல்

சுப்பிரமணிய பாரதியார்

## பயிற்சி

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. குழந்தைகளை நாம் ஏசலாமா?
2. காகத்திற்கு என்ன செய்ய வேண்டும்?
3. மனிதர்களின் தோழன் யார்?
4. காலையில் எழுந்தவுடன் என்னென்ன செய்ய வேண்டும்?
5. எங்களுக்கு யார் துணை?

ஆ. சரியான சொல்லைத் தெரிவுசெய்து, வாக்கியமாகப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்:

1. பாரதியார் ஒரு (விஞ்ஞானி / புலவர்)
2. நமக்குத் துணை (தெய்வம்/ பாப்பா)
3. காக்கைக்கு (இரக்கப்படு / இரக்கப்படாதே)
4. தாய் சொல்லைத் (தட்டாதே/ தட்டு)
5. பால் மிகவும் (நல்லது / கெட்டது)

இ. ஒவ்வொரு சொல்லுக்கும் எதிர்க் கருத்துள்ள சொல்லைத் தெரிந்தெடுத்து இரண்டு சொற்களையும் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்:

மெய், முன்பு, மாலை, அகம், இன்பம்

உதாரணம்: காலை – மாலை

புறம் – . . . . . . . .
துன்பம் – . . . . . . . .
பொய் – . . . . . . . .
பின்பு – . . . . . . . .

## தவணை 1

### மாதிரி வினாக்கள்

அ. பின்வருஞ் சொற்களுக்கு ஒத்த கருத்துள்ள சொற்களை எழுதுக.

1. நாள்
2. கும்பிடுதல்
3. களிப்பு
4. மனம்
5. அரசன்

ஆ. எதிர்க் கருத்துள்ள சொற்களை எழுதுக.

1. ஏழை
2. அறிவாளி
3. சிரித்தார்
4. நிறை
5. வளர்தல்

இ. பின்வரும் வாக்கியங்களை வினாக்களாக மாற்றுக.

உ—ம்: சட்டி குட்டி போடும்
சட்டி குட்டி போடுமா?

1. ஒளவையார் பாடல்கள் பாடினார்.
2. கந்தளாய்க் குளத்தைக் குளக்கோட்டன் கட்டுவித்தான்.
3. கணேசன் கண்டியிலே கல்வி கற்றான்.
4. முல்லா விகடமாகப் பேசுவார்.
5. தேவதத்தன் வேட்டையில் விருப்பமுடையவன்.

ஈ. மாறிக்கிடக்கும் சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

1. வரம்புகள் / வயல் /உயரமானவை.
2. கரும்பு/ கந்தளாயில்/ தோட்டங்கள்/ உண்டு
3. நாங்கள் / போடுவோம் / கோலம் / வாசலில்
4. சித்தார்த்தர் / இளமைப்பெயர் / கௌதம புத்தரின்.
5. சிறந்த / மரியாதை இராமன் / புத்திசாலி.

உ. பின்வரும் கூட்டிலுள்ள வெற்றுச் சதுரங்களிலே பொருத்தமான எழுத்துக்களைக் கொண்டு சொற்களை ஆக்கி எழுதுக. சொற்களை ஆக்குவதற்குக் கீழே தரப்பட்டுள்ள விளக்கக் குறிப்புக்களைப் பயன் படுத்துக.

மேலிருந்து கீழ்

1 — தகப்பனாரை அழைக்கும் முறை

3 — நாலு வாரங்களைக் கொண்டது

இடமிருந்து வலம்

1 — தாயாரை அழைக்கும் முறை

6 — காலுக்கு இன்னொரு பெயர்

| | | |
|---|---|---|
| 1 அ | 2 ம் | 3 மா |
| 4 ப் | ╳ | 5 த |
| 6 பா | 7 த | 8 ம் |

# 9. வாழை கதை சொன்னால்.

இந்தப் படத்தைப் பாருங்கள். இதில் நானும் தாயாரும் சகோதரர்களும் இருக்கிறோம். நானே என் தாயாரின் மூத்த பிள்ளை. நாங்கள் கதலி என்னும் இனத்தைச் சேர்ந்தவர்கள்.

ஒரு வீட்டுத் தோட்டத்தில் நாங்கள் வாழ்கிறோம். எங்களுக்குப் பக்கத்திலே கப்பல், மொந்தன், இதரை என்னும் இனத்தவர்கள் பலரும் வாழ்கிறார்கள். வீட்டுக்காரர் நல்ல பசளையிட்டு நீர் பாய்ச்சி எங்களை வளர்க்கிறார். அதனால், நாங்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகச் செழித்து வளர்கிறோம். வீட்டுக்காரர் எங்கள் செழிப்பைக் கண்டு மகிழ்வார்.



எங்களுக்குப் பக்கத்திலே எங்கள் தாயாரின் சகோதரி ஒருத்தி வாழ்ந்தாள். அவள் பத்து அடி உயரம் வரை வளர்ந்து அழகான பொத்தியை ஈன்றாள். பொத்தியிலிருந்து சீப்புச் சீப்பாய்ப் பல காய்கள் வெளிவந்தன. அவை நன்கு முற்றிப் பொன்னிறமாய்ப் பழுத்தன; பார்ப்பதற்கு மிகவும் அழகாய் இருந்தன. நான் அவற்றைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தேன்.

ஒரு நாள் எங்களை அன்போடு வளர்த்த வீட்டுக்காரர் வந்தார்; தயாரின் சகோதரி சுமந்து நின்ற பழக்குலையை வெட்டிச் சென்றார். குலை ஈன்றதும் எங்கள் வாழ்வு முடிந்துவிடும் என்பதை நான் அப்பொழுதுதான் உணர்ந்தேன்.

பிள்ளைகளே, மக்களிற் சிலர் தாம் வாழுங் காலத்திலும் பிறருக்கு உதவி செய்யார்; மாளுங் காலத்திலும் உதவி செய்யார். அவர்களால் எவருக்கும் எப் பயனும் இல்லை. ஆனால் நாங்கள் வாழுங் காலத்தில் எங்கள் இலை, பூ என்பவற்றை உங்களுக்குத் தருகின்றோம்; மாளுங் காலத்திலும் பழக் குலை, மடல் என்பவற்றைத் தந்து உதவுகிறோம். அதனால் எங்களை நீங்கள் ஒரு பொழுதும் மறக்கமாட்டீர்கள் என்று எண்ணுகிறேன்.

இப்பொழுது என் தாயார் ஒரு பெரிய குலையை ஈன்றிருக்கிறார். சில மாதங்களின் பின் நானும் என் சகோதரிகளும் குலை ஈனுவோம். எங்கள் சந்ததியும் பெருகி, இப்படியே பயன்தரும்.

## பயிற்சி

**அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:**

1. வாழையில் என்னென்ன இனங்கள் உள்ளன?
2. வாழையை எவ்வாறு வளர்க்கிறார்கள்?
3. வாழையின் இனப்பெருக்கம் எவ்வாறு நிகழ்கின்றது?

4. வாழையினாற் கிடைக்கும் பயன்கள் எவை?
5. சுயசரிதை என்பதன் பொருள் யாது?

ஆ. சரியான சொல்லைத் தெரிவுசெய்து பயிற்சிப் புத்தகத்தில் வாக்கியமாக எழுதுங்கள்:

1. நாங்கள் (வாழைப்பழம். வாளைப்பழம்) சாப்பிடுவோம்.
2. சிலர் (மாழுங் காலத்திலும், மாளுங் காலத்திலும்) உதவி செய்யார்.
3. காய் பழுத்துப் (பளம், பழம் )ஆகும்.
4. குலை ஈன்ற பின் வாழையின் (வாழ்வு, வாள்வு) முடிந்துவிடும்.
5. வாழைக்குப் (பசழை, பசளை) இடல் வேண்டும்.

இ. பின்வருஞ் சொற்களில் ஆண்பாற் சொற்களுக்குப் பொருத்தமான பெண் பாற் சொற்களைத் தெரிவு செய்து இரண்டு சொற்களையுஞ் சோடியாகப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்:

**மாணவன், சிறுமி, மாணவி, தாய், வீட்டுக்காரன், மகன், சகோதரி, சிறுவன், தந்தை, வீட்டுக்காரி, மகள், சகோதரன்.**

| | | ஆண்பால் | பெண்பால் |
|---|---|---|---|
| உதாரணம்: | 1. | மாணவன் | மாணவி |
| | 2. | | |
| | 3. | | |
| | 4. | | |
| | 5. | | |

# 10. விபுலாநந்த அடிகள்

மட்டக்களப்பிலே காரைதீவு என்னும் ஓர் ஊர் உண்டு. அவ்வூரிலே சாமித்தம்பி என்பவர் வாழ்ந்து வந்தார். அவருடைய மனைவியாரின் பெயர் கண்ணம்மை. அவர்களுக்குக் கர ஆண்டு பங்குனி மாதம் 16 ஆம் நாள் (அஃதாவது 1892 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 29 ஆம் தேதி அன்று) ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. அதற்கு அவர்கள் மயில்வாகனன் என்று பெயரிட்டனர்.

மயில்வாகனனாருக்குக் கல்வியில் மிகுந்த ஆர்வம் இருந்தது. பத்தாம் வயதில் அவருடைய கணித ஆற்றலைக் கண்டு அவரைக் கற்பித்த ஆசிரியர்களும் வியப்படைந்தனர். பதினாறாம் வயதிற் கேம்பிரிட்சுச் சீனியர் பரீட்சையில் அவர் முதலாந் தரச் சித்தி எயதினார். தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளை அவர் கசடறக் கற்றார். கொழும்பில் ஆங்கில ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிற் சேர்ந்து, தம் இருபதாம் வயதில் அவர் பயிற்றப்பட்ட ஆசிரியரானார். இந்தத் தகைமைகளுடன் அவர் மட்டக்களப்புக்குச் சென்று, அங்கு இரண்டு ஆண்டுகள் வரை ஆசிரியராகப் பணி புரிந்தார். அதன் பின் மீண்டுங் கொழும்புக்கு வந்து, அரசினர் பொறியியற் கல்லூரியிற் சேர்ந்தார். அங்கு கற்று விஞ்ஞான உயர் தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றார் அதே காலத்திலேயே அவர் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் பரீட்சையிலுஞ் சித்தியடைந்தார்.

அவர் தம் இருபத்தைந்தாம் வயதில் யாழ்ப்பாணஞ் சென்று, புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆங்கில ஆசிரியரானார். அங்கு கற்பிக்குங் காலத்தில் இலண்டன் பல்கலைக்கழக விஞ்ஞானப் பட்டதாரிப் பரீட்சையிலுஞ் சித்தி பெற்றார். பின்னர் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபர் பதவி அவருக்குக் கிடைத்தது.

புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியராக இருந்த காலத்தில், அவர் யோகர் சுவாமியுடனுந் தொடர்பு

கொள்ள நேர்ந்தது. அவர் தம் வாழ்நாள் முழுவதும் இந்து சமயத்துக்குந் தமிழ் மொழிக்குந் தொண்டுசெய்ய விரும்பினார். அவருடைய மனம் துறவு வாழ்க்கையை நாடியது. எனவே, அவர் துறவு பூண்பதற்காகச் சென்னையிலுள்ள இராமகிருஷ்ண சங்கத்துக்குச் சென்றார். அங்கு தவத்திரு சிவானந்த சுவாமிகள் இரத்தாட்சி ஆண்டு (அஃதாவது 1924 ஆம் ஆண்டு) சித்திரை மாதம் பௌர்ணமி நாளன்று அவருக்குக் காவியுடை வழங்கினார்: ஞான உபதேசஞ் செய்தார்; சுவாமி விபுலாநந்தர் என்னுந் தீட்சைப் பெயருஞ் சூட்டினார். இவ்வாறாக அவர் இராமகிருஷ்ண சங்கத் துறவிகளுள் ஒருவரானார்.

அடுத்த ஆண்டு அவர் இலங்கைக்கு வந்தார். இங்கு அவர் பாடசாலைகள், கல்லூரிகள், ஏழைச் சிறுவர் இல்லம், இராமகிருஷ்ண நிலையங்கள் முதலியவற்றை நாட்டின் பல்வேறு பாகங்களில் நிறுவினார். மக்கள் அவரை 'விபுலாநந்த அடிகள்' என்று அழைத்தனர்.

அவர் தம் முப்பத்தொன்பதாம் வயதில் மீண்டுந் தமிழ் நாட்டுக்குச் சென்றார்; அங்கே, சிதம்பரத்தில் அமைந்துள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே தமிழ்ப் பேராசிரியராக மூன்று ஆண்டுகள் பணி புரிந்தார். அப்பல்கலைக்கழகத்தில் முதன்முதலாக அப்பதவி அவருக்கே வழங்கப்பட்டது. பின்னர் அவர் இலங்கைக்கு வந்தபொழுது, இங்கும் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியர் பதவிக்கு அவரே முதன்முதலாக நியமிக்கப்பட்டார். தம் இறுதிக் காலம் வரை அவர் அப்பதவியிற் பணிபுரிந்தார்.

சுவாமி விபுலாநந்தர் பல கட்டுரைகளும் நூல்களும் எழுதியுள்ளார். அவர் எழுதிய நூல்களுள் யாழ் நூல் என்பது மிகவுஞ் சிறந்தது. தமிழுக்கும் இந்து சமயத்துக்கும் அவர் ஆற்றிய தொண்டுகளுக்காகத் தமிழ் மக்கள் என்றென்றும் அவருக்குக் கடமைப்பட்டுள்ளனர். அவர் தம் ஐம்பத்தைந்தாவது வயதில், அஃதாவது சர்வசித்து (1947) ஆண்டு ஆடி மாதம் 19 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

## பயிற்சி

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. விபுலாநந்த அடிகள் பிறந்த ஊர் எது?
2. அவருடைய பெற்றோரின் பெயர் என்ன?
3. அவருடைய பெற்றோர் அவருக்கு இட்ட பெயர் என்ன?
4. அவர் பெற்ற பட்டங்கள் எவை?
5. சுவாமி விபுலாநந்தர் என்னும் பெயர் அவருக்கு யாரால் சூட்டப்பட்டது? ?

ஆ. சரியான சொல்லைத் தெரிவுசெய்து முழு வாக்கிய மாகப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்:

1. சாமித்தம்பி என்பவருக்கு ஓர் ஆண் (குளந்தை/ குழந்தை) பிறந்தது.
2. மயில்வாகனனார் .(இளமையிலே / இழமையிலே) படிப்பில் ஊக்கம் காட்டினார்.
3. அவர் பல்கலைக் (களகத்திலே/ கழகத்திலே) தமிழ்ப் பேராசிரியராய் இருந்தார்.
4. அவருடைய (தமிள்ப் / தமிழ்ப்) பணி போற்றுதற் குரியது.
5. அவர் பல நூல்களை (எளுதினார்/ எழுதினார்)

இ. சுவாமி விபுலாநந்தரைப் பற்றிப் பத்து வாக்கியங்கள் எழுதுங்கள்.

## 11. தனக்கு வந்தால் தெரியும்

கண்ணம்மா ஒரு பூனையை வளர்த்து வந்தாள். அது வெள்ளை நிறமுடைய அழகிய பூனை. அந்தப் பூனை அவ்வீட்டிலுள்ள எலிகளைப் பிடித்துத் தின்று கொழுத்திருந்தது.

ஒரு நாள் அந்தப் பூனை ஓர் எலியைப் பிடித்தது. அந்த எலியை உடனே அது தின்ன விரும்பவில்லை. அத னுடன் சிறிது நேரம் விளையாட விரும்பியது. எலியைத் தன் முன்னங் கால்களாற் பிடித்துக்கொண்டு சீறியது; விளையாட்டாகக் கடித்தது. எலி அஞ்சி நடுங்கியது; விழிகளை அங்கும் இங்கும் உருட்டி விழித்தது; எப்படித் தப்பலாம் என்று எண்ணி, ''கீச்...கீச்'' என்று கத்தியது. அது பூனையைப் பார்த்து, ''பூனையாரே, நீங்கள் பெரியவர். நான் சிறியவன். தயவுசெய்து என்னை விட்டு விடுங்கள்'' என்று கெஞ்சியது.



எலி பயந்து நடுங்குவதைக் கண்ட பூனை சிரித்தது. எலியைப் பார்த்து, ''எலிப் பிள்ளையே, அஞ்சாதே, நான் உன்னைக் கொல்ல மாட்டேன்; என் பிடியிலிருந்து உன்னை விட்டு விடுகிறேன். நீ போகலாம்'' என்று சொல்லி அது தன் காலை எடுத்தது. எலி தப்பினேன் பிழைத்தேன் என்று ஓடியது. அது சிறிது தூரம் ஓடியதும், பூனை பாய்ந்து அதனைப் பிடித்துக்கொண்டது. இவ்வாறு பூனை எலியை விடுவதும் பிடிப்பதுமாய் விளையாடியது. எலி வேதனையாலே துடிதுடித்தது.

அப்பொழுது அங்கே ஒரு நாய் வந்தது. அதைக் கண்ட பூனை எலியை விட்டுவிட்டு ஓடப் பார்த்தது. எலி ஓடி ஒளித்துக்கொண்டது. நாய் பூனையைப் பார்த்து உறுமியது. பூனை தப்பியோட முடியவில்லை. அது மயிரைச் சிலிர்த்தது; நாயைப் பார்த்து உறுமியது. நாய் பூனையின் மீது பாய்ந்தது. அதனைப் பிடித்து உதறி எறிந்தது. பூனை வேதனை தாங்கமாட்டமற் கத்தியது. நாய் அதைப் பார்த்துக் குரைத்தது. பூனை நாயைப் பார்த்து



''நாயாரே, நீரோ பெரியவர். நான் சிறியவன். தயவு செய்து என்னை விட்டுவிடும்'' என்று கெஞ்சியது. நாய் சரி என்று கூறிவிட்டு நிலத்தில் இருந்தது. பூனை மெதுவாக எழுந்து போக எத்தனித்தது. உடனே நாய் அதன்மேற் பாய்ந்து காலால் மிதித்தது. பூனை துடி துடித்தது.

அங்கு நடந்தவற்றை ஒளிந்திருந்து பார்த்த எலி, ''பூனையாருக்கு நான் பட்ட துன்பம் இப்போதாவது தெரிந்திருக்கும்'' என்று சொல்லிக்கொண்டு அப்பாற் சென்றது.

## பயிற்சி

**அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:**

1. கண்ணம்மா வீட்டுப் பூனை எப்படிக் கொழுத்தது?
2. எலி ஏன் வேதனைப்பட்டது?
3. அது தப்புவதற்காகப் பூனைக்கு என்ன சொன்னது?

4. நாய் பூனைக்கு என்ன செய்தது?
5. முடிவில் எலி என்ன சொல்லிக்கொண்டு அப்பாற் சென்றது?

ஆ. பின்வரும் பந்தியிலுள்ள இடைவெளிகளுக்கு உரிய சொற்களை இட்டு, பந்தி முழுவதையும் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்:

''நான் ........ கொல்ல மாட்டேன். என் ..........உன்னை விட்டுவிடுகின்றேன். ...... போகலாம்'' என்று சொல்லி ..... தன் .... எடுத்தது. எலி ........... பிழைத்தேன். ..... ஓடியது. எலி சிறிது. ....... ஓடியதும், பூனை பாய்ந்து ......... அதனைப் பிடித்துக் கொண்டது. இவ்வாறு பூனை. ....... விடுவதும் ...... .......... விளையாடியது. எலி ............. துடிதுடித்தது.

இ. முதலாம் நிரலில் உள்ளவை எழுவாய்ச் சொற்கள். இரண்டாம் நிரலில் உள்ளவை பயனிலைச் சொற்கள். இவற்றிற் பொருத்தமான சொற்களை இணைத்து வாக்கியமாகப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்:


| எழுவாய்ச் சொல் | பயனிலைச் சொல் |
|---|---|
| நான் | படிக்கின்றாய் |
| நாங்கள் | படிக்கின்றாள் |
| நீ | படிக்கின்றேன் |
| நீங்கள் | படிக்கின்றோம் |
| அவன் | படிக்கின்றார்கள் |
| அவள் | படிக்கின்றான் |
| அவர்கள் | படிக்கின்றீர்கள் |

# 12. உணவைப் பேணல்

ஒரு நாள் சந்திரனும் அவனுடைய தமக்கையும் அவர்களுடைய பெற்றோருடன் சந்தைக்குச் சென்றனர். அன்று சந்தையில் எலுமிச்சம் பழம் மலிவாக இருந்தது. எனவே, அவர்களுடைய தாயார் நூறு எலுமிச்சம் பழம் வாங்கிக் கொண்டு வந்தார். அப்பொழுது நடைபெற்ற ஓர் உரையாடலை இங்கே பார்ப்போம்.

சந்திரன்: ஏன் அக்கா இவ்வளவு பழங்கள்? நாலைந்து நாள்களில் அவை அழுகிப்போமே.

தமக்கை: எங்களுக்கு அவை அழுகாமற் பாதுகாக்கும் முறை தெரியும். ஒவ்வொரு பழத்தையும் நாலு நாலாக வெட்டி உப்புத் தடவுவோம். பின் வெயிலில் நன்றாகக் காய விட்டு வற்றல் ஆக்குவோம். அப்போது அவை பழுதுபடா.



**தாய்:** தேவையானபொழுது, அந்த வற்றலை எடுத்து எலுமிச்சம் புளி விடுவோம். அதனுள், மஞ்சள், வெந்தயம், செத்தல் மிளகாய் ஆகிய வற்றின் தூளை இட்டுச் சில நாள்கள் ஊற வைப்போம். ஊறுவதற்குப் புளி போதா விட்டால் மீண்டும் புளி விடுவோம்.

**சுந்திரன்:** ஓ! அது தானே ஊறுகாய்? நினைக்கவே வாய் ஊறுகிறது. அது சரி: வெட்டிய பழத்துக்கு ஏன் உப்புத் தடவ வேண்டும்?


**தந்தை:** உப்புச் சில பொருள்களைப் பழுதுபடாமற் பாதுகாக்கும். எனவே, உப்பிட்டு வெயிலிற் காய வைத்தால் அப்பொருள்கள் பழுதுபடா.

**தமக்கை:** மாரி காலத்தில் மிளகாயும் பாகற்காயும் பொரித்துத் தாருங்கள் என்று ஒற்றைக் காலில் நிற்பாயே, மறந்து விட்டாயா? அப்போது என்ன செய்வோம் தெரியுமா? மிளகாய் வற்றலையும் பாகற்காய் வற்றலையும் பொரித்துத் தருவோம். சில காலங்களில் பச்சை மிளகாய், பாகற்காய், சுண்டங்காய், கத்தரிக்காய், மாங்காய் முதலியன அதிகமாகக் கிடைக்கும். அக்காலங்களில் அவற்றை வற்றலாக்கிப் பாதுகாப்பார்கள். விரும்பிய நேரத்தில் அவற்றைப் பயன்படுத்துவார்கள்.

**தந்தை:** ஊறுகாய் போடுதல், வற்றலாக்குதல் என்பன உணவைப் பாதுகாக்கும் சில இலகுவான வழிகள். இவற்றுக்குப் பணச்செலவு மிகக் குறைவு.

**சந்திரன்:** அப்படியானால், தக்காளிப் பழம், விளாம் பழம் முதலான பழங்களைப் பாதுகாத்து வைப்பது எப்படி?

**தாய்:** பழங்களைப் பல நாள்களுக்குப் பாதுகாத்து வைக்க முடியாது. ஆகவே, அவற்றிலிருந்து பழப்பாகு அல்லது பழச்சாறு செய்வார்கள். அதோ பார். அந்தக் கடையிலே பழங்களின் படங்கள் ஒட்டப்பட்ட சிறிய போத்தல்கள்



இருக்கின்றன அல்லவா? அவை பழப்பாகு நிறைந்த போத்தல்கள். பழங்களின் படங்கள் ஒட்டப்பட்ட பெரிய போத்தல்களிலே பழச் சாறு உண்டு.

சந்திரன்: அப்படியா? நான் என்னுடைய பணத்திற்குப் பழப்பாகு வாங்கப் போகிறேன், அக்கா. அதனை நாங்கள் பாணுக்குப் பூசிச் சாப்பிட லாம்.

## பயிற்சி

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. எலுமிச்சம்பழ ஊறுகாயை எவ்வாறு செய்கின்றனர்?
2. உணவுப் பொருள்களைப் பாதுகாக்கும் முறைகள் எவை?
3. மாரி காலத்தில் வற்றல்களை ஏன் பயன்படுத்து கின்றனர்?
4. பழங்களை எப்படிப் பேணி வைக்கலாம்?
5. பழப்பாகு எவ்வாறு செய்யப்படுகின்றது?

ஆ. அடைப்புக்குள் இருக்கும் பொருத்தமான சொல்லைத் தெரிந்தெடுத்து , முழு வாக்கியமாகப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்:

1. சந்திரன் தமக்கையுடன் சந்தைக்குப் (போனான், போகவில்லை).
2. சந்தையில் எலுமிச்சம்பழம் மலிவாக (இருக்க வில்லை. இருந்தது).
3. எலுமிச்சம்பழத்தில் ஊறுகாய் (செய்யலாம், செய்ய முடியாது).
4. மாரி காலத்திற் காய்கறிகள் (குறைவு, குறை வில்லை).
5. பழங்களிலிருந்து பழப்பாகும் பழச்சாறுஞ் (செய் வார்கள், செய்யமாட்டார்கள்).

இ. சரியான சொல்லைத் தெரிந்தெடுத்து வாக்கியமாகப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்:

1. நாங்கள் (ஊறுகாய், ஊருகாய்) செய்தோம்.
2. மழை (மாறியில், மாரியில்) அதிகமாகப் பெய்யும்.
3. பாகற்காயிற் (கறி, கரி) சமைக்கலாம்.
4. பழங்களிலிருந்து (சாரு, சாறு) எடுக்கலாம்.
5. மோர் மிளகாய்ப் (பொறியல். பொரியல்) சுவை யானது.

# 13. புரிந்து கொண்டால்!

எங்கள் நாடு இன்ப வீடு
என்றே உணர்ந்திடுவோம் - இதனை
நன்றே உணர்ந்திடுவோம் - இந்த
இன்ப வீட்டில் வாழும் சோதரர்
இனியர் நாம் அறிவோம் - இந்த
எண்ணத்தைப் பெறுவோம் !

இனமும், ஏற்கும் சமயமும், மொழியும்
ஏற்றந் தருவனவாம் - ஏற்போர்க்
கேற்றந் தருவனவாம் - இவற்றின்
பெயரைச் சொல்லிப் பிளவைப் பெருக்கல்
பேதையர் செயலாம் - உதவாப்
பேதையர் செயலாம் !

கருத்து மோதல் காணும் போது
கனிவாய் ஆய்ந்திடுவோம் - நுணுகிக்
கனிவாய் ஆய்ந்திடுவோம் - நியாயப்
பொருத்த மெங்குண்டோ அங்கு
விட்டுக் கொடுத்திடுவோம் - பேதம்
விரட்டி யோட்டிடுவோம் !

எம். ஸி. எம். ஸுபைர்
''காலத்தின் குரல்கள்''

## பயிற்சி

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. எங்கள் நாடு எத்தகையது?
2. இந்த வீட்டில் வாழ்பவர்கள் யார்?
3. இனம், மொழி, சமயம் என்பன என்ன தரும்?
4. பிளவைப் பெருக்குதல் யார் செயல்?
5. கருத்துமோதல் காணும்போது என்ன செய்ய வேண்டும்?

ஆ. ஒத்த சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிந்தெடுத்துப் பயிற்சிப் புத்தகத்தில் இரண்டு சொற்களையும் எழுதுங்கள்:

உதாரணம்: சோதரர் (நண்பர், சகோதரர், பகைவர்)
சோதரர் — சகோதரர்

1. நாடு (உலகம்,, தேசம், நகரம்)
2. வீடு (இல்லம், பாசறை, குடிசை)
3. பேதையர் (அறிஞர், மனிதர், மடையர்)
4. பிளவு (பிரிவு, முறிவு, மோதல்)
5. ஆய்ந்திடுவோம் (ஆராய்ந்திடுவோம், அறிந்திடுவோம், உணர்ந்திடுவோம்).

இ. பின்வருஞ் சொற்களில் ஒருமைச் சொற்களுக்குப் பொருத்தமான பன்மைச் சொற்களைத் தெரிவு செய்து, இரண்டு சொற்களையுஞ் சோடியாகப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்

என், நான், பேதையர், எங்கள், இனம், சமயங்கள், மொழி, இனங்கள், மொழிகள், சமயம், நாம், பேதை.

உதாரணம்:

| ஒருமை | பன்மை |
|---|---|
| என் | எங்கள் |
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |

# 14. சுத்தஞ் சுகந் தரும்

''சுண்டல், சுண்டல்'' என்று ஒருவன் கூவிக்கொண்டு போனான். சில நிமிடங்களில் ''வடை, வடை'' என்று கத்தியவாறு இன்னொருவன் வந்தான்.

வடையைக் கண்ட சந்திரன், ''அப்பா வடை வாங்கித் தாருங்கள்'' என்றான்.

''இந்த வடை கூடாது; வீட்டிலே சுட்டுச் சாப்பிடுவோம்''

''ஏன் அப்பா இந்த வடை கூடாது? அதோ அந்தப் பையன் வாங்குகிறானே?

அப்பொழுது வடைக்காரன் ஒரு பையனின் முன் வடைத் தட்டை இறக்கி வைத்தான். வைத்த வடைத் தட்டிலிருந்து 'ஙொய்' என்ற இரைச்சலுடன் இலையான்கள் பறந்து சென்றன.



''அதோ பார்த்தாயா: எவ்வளவு இலையான்கள். சீச்சீ! இப்படி இலையான் மொய்த்த வடைகளைச் சாப்பிடலாமா?''

''அவற்றைச் சாப்பிட்டால் நோய் வரும்''.

''வடையிலிருந்து எப்படியப்பா நோய் வரும்?''

''இலையான் ஓர் அசுத்தப் பிராணி. அது எச்சிலிலும் இருக்கும்; எருவிலும் இருக்கும்; மலத்திலும் இருக்கும்; மாமிசத்திலும் இருக்கும்; பின் நாம் உண்ணும் உண விலும் இருக்கும்'

''ஐயையோ! எனக்கு அந்த வடை வேண்டாம். அந்த வடையை உண்டால் நோய் வரும் என்றீர்களே! எப்படி அப்பா?

''நோயாளிகளின் மலத்திலும், எச்சிலிலும் நோய்க் கிருமிகள் இருக்கின்றன. அசுத்தமான வேறு பொருள் களிலும் நோய்க் கிருமிகள் இருக்கின்றன''.

''கிருமிகள் என்றால் என்ன அப்பா? பூச்சியா, புழுவா?''

''கிருமிகள் பூச்சி புழுக்களைவிட மிகமிகச் சிறியவை. கண்ணுக்குத் தெரியாதவை. இந்தக் கிருமிகளினாற் பல் நோய்கள் உண்டாகின்றன. இலையான்கள் மலத்தில் அல்லது எச்சிலில் இருக்கும்போது அவற்றின் கால்களில் நோய்க் கிருமிகள் ஒட்டிக்கொள்ளும். பின் அவை நமது உணவில் வந்து இருக்கும்போது அக்கிருமிகள் எமது உணவில் ஒட்டிக்கொள்ளும். அந்த உணவை நாம் உண் ணும்போது கிருமிகள் நமது உடம்பினுட் செல்லும். அதனால் நமக்கு நோய் உண்டாகும்.''

'' இதற்காகத்தானா உணவுப் பண்டங்களை எல்லாம் அம்மா மூடி வைக்கிறார்?

வீட்டை அடைந்தபின் சந்திரனுக்கு அவன் தாயார் வடை சுட்டுக் கொடுத்தார். அவன் அவற்றைச் சுவைத் துச் சாப்பிட்டான்.

## பயிற்சி

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. வீதியில் விற்கும் சுண்டல், வடை முதலியவற்றை ஏன் சாப்பிடலாகாது?
2. உணவுப் பொருள்கள் எவ்வாறு அசுத்தம் அடைகின்றன?
3. 'இலையான் ஓர் அசுத்தப் பிராணி' என ஏன் கூறப்படுகிறது?
4. உணவுப்பொருள்களை ஏன் மூடிவைத்தல் வேண்டும்?
5. கிருமிகள் என்றால் என்ன?

ஆ. பின்வருஞ் சொற்களை அவற்றுக்கு ஒத்த கருத்துள்ள சொற்களுடன் சோடியாகப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்:

1. ஈ ——
2. வியாதி ——
3. தூய்மை ——
4. உணவு ——
5. அன்னை ——

இ. பின்வருஞ் சொற்களை அவற்றுக்கு எதிர்க் கருத்துள்ள சொற்களுடன் சோடியாகப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்:

1. முன் ——
2. சிறிது ——
3. சில ——
4. நன்மை ——
5. சுத்தம் ——

# 15. ஒரு வழக்கு

சேவகன் : அமைதி! அமைதி! நீதிபதி மன்றத்துக்கு வருகிறார்.


(எல்லாரும் எழுந்துநிற்கிறார்கள். நீதிபதி வந்து ஆசனத்தில் அமருகிறார். மற்றவர்களும் அமருகிறார்கள்)

சேவகன் : சாக்கடை ஈயர், சாக்கடை ஈயர், சாக்கடை ஈயர்.

(சாக்கடை ஈயர் வந்து கூண்டில் நிற்கிறார்.)

அழுக்கடை நுளம்பர், அழுக்கடை நுளம்பர், அழுக்கடை நுளம்பர்.

(அழுக்கடை நுளம்பரும் வந்து கூண்டில் நிற்கிறார்.)



நீதிபதி : என்ன குற்றம் செய்தார்கள், இவர்கள்? தெளிவாகச் சொல்லும், பொலிசாரே!

பொலிசார் : பிரபு, இருவரும் செய்தவை கொலை முயற்சிக் குற்றங்கள். ஈயர் இருபத்தெட்டுப் பேருக்கு வாந்திபேதி நோயை உண்டாக்கினார். ஒருவர் செத்துப் போனார். ஒன்பது பேர் சாகக் கிடக்கிறார்கள்.

நீதிபதி : நுளம்பரின் குற்றம்?

பொலிசார் : ஐம்பத்து மூன்று பேருக்கு மலேரியாக் காய்ச்சலை உண்டாக்கினார். பல நாள்களாக அந்த நோயாளிகள் படுக்கையில் இருக்கிறார்கள்.

நீதிபதி : என்ன சொல்லுகிறீர்? ஈயரே, நீர் குற்றவாளியா? சுத்தவாளியா?

ஈயர் : சுத்தவாளி பிரபு.

நீதிபதி : நுளம்பரே, நீர் குற்றவாளியா, சுத்தவாளியா?

நுளம்பர் : சுத்தவாளி பிரபு.

நீதிபதி : சரி, சாட்சிகள் வரட்டும்.

(இறந்த நோயாளி ஒருவரின் ஆவி திடீரென்று வந்து சாட்சிக்கூண்டில் நிற்கிறது. எல்லாரும் பரபரப்பு அடைகிறார்கள்).

நீதிபதி : நீரோ முதலாம் சாட்சி? உமது பெயர் என்ன?

ஆவி : இப்பொழுது என் பெயர் ஆவி. சாகு முன் என் பெயர் சரவணை. எங்கள் வீட்டில் ஈக்கள் அதிகம். சாக்கடை ஈயரும் அவருடைய தோழர்களும் எங்கள் உணவில் வந்து இருப்பது வழக்கம். அவர்கள் இருந்த உணவை

உண்டதனால் எனக்கு வாந்திபேதி வந்தது. வைத்தியரும் அப்படித்தான் சொன்னார்.

நீதிபதி : வைத்தியரின் சாட்சியைப் பிறகு கேட்போம். இப்போது இரண்டாம் சாட்சி வரட்டும்.

(இறுக்கிப் போர்த்தபடி நடுங்கிக் கொண்டு இளையதம்பி என்பவர் வருகிறார். சாட்சிக் கூண்டில் நிற்கமுடியாது தள்ளாடுகிறார்.)

நீதிபதி : யார் நீர்? பழக்க வழக்கம் தெரியாதவர்; நீதிமன்றத்தை அவமதிக்கிறீர்.

பொலிசார் : இல்லைப் பிரபு. இவர் நோயாளி. பலவீனத்தாலே தள்ளாடுகிறார். இவர் தான் இரண்டாம் சாட்சி.

இளையதம்பி : பிரபு என் பெயர் இளையதம்பி. அழுக்கடை நுளம்பரும் அவருடைய தோழர்களும் என்னைக் குத்தியிருக்கிறார்கள். குத்தியதால் எனக்கு. மலேரியா வந்தது.

நுளம்பர் : நான் இதை மறுக்கிறேன், பிரபு. குத்துவதற்கு என்னிடம் ஊசி இல்லை. என் தோழரிடமும் ஊசி இல்லை.

பொலிசார் : ஊசி இல்லை என்றால், வேறு கூரிய ஆயுதத்தினாலே குத்தியிருக்கலாம். ஒரு வேளை நுளம்பரிடம் கூரிய உறுப்பு ஏதும் இருக்கக்கூடும்.

நீதிபதி : சரி, இனி வைத்தியர் வரட்டும். சரவணை இறந்தது எதனால்?

வைத்தியர் சரவணை இறந்தது வாந்திபேதியால். வாந்திபேதியைப் பரப்பியவர் ஈயர்

நீதிபதி இளையதம்பிக்கு மலேரியா வந்தது எப்படி?

வைத்தியர் : இளையதம்பிக்கு மலேரியா வந்தது நுளம்பரால். நுளம்புகள் குத்துவது ஊசியால் அன்று. அவை வாய் உறுப்பினாலேதான் குத்துகின்றன.

நீதிபதி : நல்லது. சாக்கடை ஈயரே. நீர் சொல்வதற்கு ஏதும் உண்டா?

ஈயர் : நான் ஒரு குற்றமும் அறியேன், பிரபு. பறந்து போகும்போது, என் இறக்கைகள் வலித்தன. சற்று ஓய்வு எடுப்பதற்காகத் திருவாளர் சரவணையின் உணவில் இருந்தேன். இந்த நாட்டில் ஓர் இடத்தில் இருப்பதுகூடக் குற்றமா?

பொலிசார் : மலத்தில் இருந்துவிட்டு உணவில் இருந்தது குற்றமில்லையா?

நீதிபதி : ஈயர் மலத்தில் இருந்தார் என்பதற்குச் சாட்சி?

இளையதம்பி : நான் பார்த்தேன், பிரபு. நேரிலே பார்த்தேன்.

நீதிபதி : இப்பொழுது என்ன சொல்லுகிறீர், ஈயரே?

ஈயர் : அப்படி இருந்தது உண்மைதான், பிரபு. அதனால் வாந்திபேதி வரும் என்பது எனக்குத் தெரியாது.

நீதிபதி : அழுக்கடை நுளம்பரே, நீர் சொல்வதற்கு ஏதும் உண்டா?

நுளம்பர் : நான் ஒரு குற்றமும் அறியேன், பிரபு. எனக்கோ கொடிய தாகம். இரத்தமே எனது பானம். திருவாளர் இளையதம்பியின் இரத்தத்திற் கொஞ்சத்தை நான் குடித்தது உண்மைதான். அப்படிக் குடித்ததனால் இளையதம்பிக்கு மலேரியா வரும் என்பதை நான் அறியேன்.

நீதிபதி : ஈயரும் நுளம்பரும் குற்றம் செய்திருக்கிறார்கள். தாம் செய்தது குற்றம் என்று அவர்கள் அறிந்திருக்கவில்லை. இது முதலாவது தடவை என்பதனால் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்க வில்லை. அவர்கள் தம் இனசனத்தோடு இந்த நாட்டை விட்டு வெளியேற வேண்டும்; அதற்கு இரண்டு நாள் தவணை கொடுக்கிறேன். அவ்வாறு வெளியேறாவிட்டாற் பலவந்தமாக வெளியேற்றப்படவேண்டி வரும். அப்பொழுது அவர்களுக்குப் பெரிய இழப்பு நேரிடும்.

## பயிற்சி

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. இவ்வழக்கில் யார்யார் பங்குபற்றுகின்றனர்?
2. இவர்களிற் குற்றவாளிகள் யார்?
3. இவர்கள் செய்த குற்றம் என்ன?
4. குற்றவாளிகள் தாம் செய்தது குற்றம் என்று அறிந்திருந்தார்களா?
5. இவர்களுக்குக் கொடுத்த தண்டனை யாது?

ஆ. பின்வருஞ் சொற்களில் 'நீ' என்னுஞ் சொல்லோடு பொருந்தி வரக்கூடிய சொல்லைச் சேர்த்துப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்:

உதாரணம்: நீ வந்தாய்

| | | |
|---|---|---|
| 1. வருவான் | 6. வருகிறாய் | 11. வருவாயா? |
| 2. வந்தாய் | 7. வருவீர் | 12. வருவீரா? |
| 3. வருவேன் | 8. வந்தேன் | 13. வருவோமா? |
| 4. வருவோம் | 9. வந்தாயா? | 14. வருகிறாயா? |
| 5. வருவாய் | 10. வருவானா? | 15. வருகிறாரா? |

இ. ஈ அல்லது நுளம்பு பற்றிப் பத்து வாக்கியங்கள் எழுதுங்கள்:

# 16. அபூநவாஸ்

அபூநவாஸ் என்பவன் ஓர் அரச சபையிலே கோமாளியாக இருந்தான். அவன் தன் வேடிக்கைப் பேச்சுகளாலும் செயல்களாலும் அரசனையுஞ் சபையோரையும் மகிழ்விப்பான். அதனால், அரசனுக்கு அவனிடம் அதிக அன்பு உண்டு.

ஒரு நாள் அபூநவாஸ் அரசனிடம் சென்றான். அங்கு அவன் விம்மி விம்மி அழத் தொடங்கினான்.

''ஓ, மகாராசாவே, என் மனைவி இறந்துவிட்டாள்'' என்று கதறினான்.

அரசன் அவன்மீது இரக்கப்பட்டு, பெருந்தொகைப் பணங்கொடுத்து அனுப்பினான். இந்தச் சம்பவம் அரசிக்குத் தெரியாது.



அபூநவாஸின் மனைவியும் அரசியிடம் போனாள்; தலைவிரி கோலமாக நின்றாள்; அழுது புலம்பினாள். ''ஓ, இராணியே! என் கணவர் இறந்துவிட்டார். இனி நான் என்ன செய்வேன்?'' என்றாள். அரசி அவளுக்குப் பெருந்தொகைப் பணம் கொடுத்து அனுப்பினாள்., இந்தச் சம்பவம் அரசனுக்குத் தெரியாது.

பின் அரசன் அரசியிடம் சென்றான். அரசனைக் கண்ட அவள், ''கேட்டீர்களா செய்தியை? நம் அபூநவாஸ் இறந்துவிட்டானாம்'' என்றாள்.

அப்பொழுது அரசன் இடைமறித்து ''இல்லை, இல்லை; அபூநவாஸ் இப்பொழுதுதான் வந்துவிட்டுப் போகிறான். அவனுடைய மனைவிதான் இறந்துவிட்டாளாம்'' என்று கூறினான்.

அரசிக்கோ ஒன்றுமே விளங்கவில்லை. ''அப்படி இருக்காது. சற்றுமுன் தானே அவள் இங்கு வந்துவிட்டுப் போகிறாள்! அபூநவாஸ் இறந்துவிட்டதாக அவளே என்னிடம் தெரிவித்தாள்'' என்றாள்.

''சரி, நாம் இருவரும் அவர்கள் வீட்டுக்குப் போய்ப் பார்ப்போம்; நடந்தது என்ன என்று நேரிலே அறிவோம்'' என்றான் அரசன். அரசனும் அரசியும் அபூநவாஸின் வீட்டுக்குப் போனார்கள். என்ன ஆச்சரியம் அங்கே அபூநவாஸும் மனைவியும் இறந்துகிடந்தார்கள். 'இதிலே ஏதோ தந்திரம் இருக்க வேண்டும்; நாங்கள் வருவதை இவர்கள் எப்படித்தான் அறிந்தார்களோ! என்று அரசன் எண்ணினான்; சிறிது நேரம் யோசித்தான்; அவர்களுக்கு அருகே சென்றான். ''இவர்களில் முதலில் இறந்தவர் அபூநவாஸா? மனைவியா? ஒன்றும் தெரிய வில்லையே! தெரிந்தால் அவருக்கு ஆயிரம் பொற்காசு பரிசு கொடுக்கலாமே என்று உரத்துக் கூறினான்.

அபூநவாஸ் துள்ளி எழுந்தான். 'நான் தான் முதலில் இறந்தேன். அரசே, காசைத் தாருங்கள் ' என்றான்.

'இல்லை, இல்லை; நான் தான் முதலில் இறந்தேன். அரசே, காசை எனக்குத் தாருங்கள்'' என்று மனைவியும் எழுந்தாள்.

அரசனும் அரசியும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். ''இப்படியா கோமாளித்தனம் செய்வது? செலவுக்குக் காசு வேண்டும் என்று கேட்டால் நாங்களே தந்திருப் போமே!'' என்று அரசன் செல்லமாகக் கோபித்தான்.

## பயிற்சி

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. அபூநவாஸ் என்பவனின் தொழில் என்ன?
2. அவன் ஏன் அழுதான்?
3. அபுநவாஸும் மனைவியும் இறந்தார்களா?
4. இறந்தவர்கள் ஏன் எழுந்தார்கள்?
5. 'முதலில் இறந்தவர் யார்' என்று அரசன் கேட்டது பரிசு கொடுப்பதற்கா?

**ஆ. பின்வருவனவற்றை நான், நீ என்பவற்றுடன் சேர்த்து வாக்கியமாக்கிப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்:**

| | | |
|---|---|---|
| 1. சிரித்தேன் | 3. சிரிப்பேன் | 5. சிரிக்கின்றாய் |
| 2. சிரிக்கின்றேன் | 4. சிரித்தாய் | 6. சிரிப்பாய் |

**இ. பயிற்சிப் புத்தகத்திலே பின்வரும் பொருத்தமான சொற்களால் இடைவெளிகளை நிரப்பி எழுதுங்கள்.**

**நடந்தது, பார்ப்போம் இறந்து, அதிசயம், பரிசு, இறந்தவர்.**

நாம் இருவரும் அவர்களின் வீட்டுக்குப் போய்ப்.... ......அப்பொழுது அங்கு என்ன.......... என்று அறியலாம். என்ன..............! கணவனும் மனைவியும் ..............கிடக்கின்றார்கள். இவர்களில் முதலில்..............யார்? அவருக்கு ஆயிரம் பொற்காசு.........கொடுக்கப்போகின்றேன்.

# 17. பொதுச் சொத்து எங்கள் சொத்து

மட்டக்களப்பிலிருந்து புகைவண்டி புறப்பட்டது. அது கொழும்பு நோக்கிச் செல்லும் உதயதேவி. அதில் ஏறிய அமீரும் அவனுடைய மாமனாரும் வசதியான ஓர் இடத்தில் அமர்ந்தனர்.

வண்டி முழுதும் மக்கள் நிறைந்திருந்தனர். ''என்ன வெயில்! புழுங்கி அவிகிறது'' மூலையில் இருந்த கிழவர் முணுமுணுத்தார். ''அந்த விசிறியைப் போட்டுவிடு தம்பி'' என்று அமீரிடம் கூறினார். அமீர் அண்ணாந்து பார்த்தான். அங்கு விசிறி இல்லை; விசிறி இருந்த இடம் மட்டுந்தான் தெரிந்தது.

''என்ன மாமா. விசிறியைக் காணவில்லையே'' என்றான் அமீர்.

''விசிறியை யாரோ திருடிவிட்டார்கள். அதோ, பார் அந்த மின் விளக்கை. அதன் கண்ணாடி மூடியையும் காணவில்லை.''

''பார் தம்பி, நான் இருக்கும் இந்த ஆசனத்தின் மேலுறையையுங் காணவில்லை. அதை என்ன வடிவாக வெட்டி எடுத்திருக்கிறார்கள் என்று சிரித்தார் கிழவர்.

அப்பொழுது மலசலகூடத்திலிருந்து ஒருவர் வந்தார். அவர், ''அங்கே இருந்த முகம் பார்க்கும் கண்ணாடியையுங்காணோம்'' என்றார்.

நாங்கள் பணங் கொடுக்காமலா பயணஞ் செய்கிறோம்? சிறிது வசதியாவது வேண்டாமா? என்ன அரசாங்கம்!'' என்று கூறினார் கிழவர்.

மாமனார் பேசத் தொடங்கினார்: ''பாருங்கள் தாத்தா, எதற்கும் அரசாங்கத்தையே குறை சொல்லக் கூடாது. அரசாங்கம் எல்லா வசதிகளையுஞ் செய்திருந்தது. யாரோ பிரயாணிகளே இவற்றை நாசஞ் செய்திருக்கிறார்கள். அரசாங்கச் சொத்து என்றால்



என்ன? அது எங்கள் சொத்து. நாங்கள் கொடுக்கும் வரிப்பணத்தைக் கொண்டு வாங்கப்பட்ட சொத்து. நாட்டு மக்கள் எல்லோருக்கும் பொதுவான சொத்து. அந்தப் பொதுச் சொத்தை எங்களுடையதாக நினைக்க வேண்டும்; நாசமாக்காமற் பாதுகாக்க வேண்டும். அப்படி எல்லாரும் நினைத்து நடந்தால் எவ்வளவு நல்லது?. ஒரு தொல்லையும் இல்லை.''

''வசு வண்டியும் பொதுச் சொத்துத்தானே மாமா? அதன் கண்ணாடிகளையும் உடைத்திருக்கிறார்கள். ஏதோ எல்லாம் எழுதியிருக்கிறார்கள்; ஆசனங்களைக் கிழித்திருக்கிறார்கள்'' என்றான் அமீர்.

மாமனார் மருமகனைப் பார்த்தார். ''ஆமாம் வசுவும் பொதுச் சொத்துத்தான். பூங்கா, நூல்நிலையம், சந்தை முதலிய எல்லாம் பொதுச் சொத்துக்களே. அவை எல்லாம் எங்கள் உடைமை. அவற்றைப் பாது காப்பது நமது கடமை'' என்றார் மாமனார்.

## பயிற்சி

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. கிழவர் அமீரிடம் என்ன உதவி கேட்டார்?
2. அரசாங்கச் சொத்து என்றால் என்ன?
3. அதனை என்ன செய்தல் வேண்டும்?
4. பொதுச் சொத்துக்கள் சிலவற்றின் பெயர்களைக் கூறுங்கள்.
5. வரிப்பணம் என்பது யாது?

ஆ. பின்வருவனவற்றை அவன், அவள், அது என்பவற்றுடன் சேர்த்து வாக்கியமாக்கிப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்.

1. எடுத்தான்
2. எடுக்கின்றான்
3. எடுப்பான்
4. எடுத்தாள்
5. எடுக்கின்றாள்
6. எடுப்பாள்
7. எடுத்தது
8. எடுக்கின்றது
9. எடுக்கும்

இ. நீங்கள் சென்ற ஒரு பயணம் பற்றிப் பத்து வாக்கியங்கள் எழுதுங்கள்.

# 18. கத்தரித் தோட்டத்துச் சேவகன்

1. கத்தரித் தோட்டத்து மத்தியிலே நின்று
காவல் புரிகின்ற சேவகா! - நின்று
காவல் புரிகின்ற சேவகா!
மெத்தக் கவனமாய்க் கூலியும் வாங்காமல்
வேலை புரிபவன் வேறுயார்! உன்னைப்போல்
வேலை புரிபவன் வேறுயார்?

கண்ணு மிமையாமல் நித்திரை கொள்ளாமல்
காவல் புரிகின்ற சேவகா! - என்றும்
காவல் புரிகின்ற சேவகா!
எண்ணில் உன்னைப்போல் இரவு பகலாக
ஏவல் புரிபவன் வேறுயார்? - என்றும்
ஏவல் புரிபவன் வேறுயார்?



3. வட்டமான பெரும் பூசினிக் காய்போல
மஞ்சள் நிறஉறு மாலைப்பார்! - தலையில்
மஞ்சள் நிறஉறு மாலைப்பார்!
கட்டி யிறுக்கிய சட்டையைப் பாரங்கே
கைகளில் அம்பொடு வில்லைப்பார்! - இரு
கைகளில் அம்பொடு வில்லைப்பார்!

4. தொட்டு முறுக்காத மீசையைப்பார்! கறைச்
சோகிபோலே பெரும் பல்லைப்பார்!- கறைச்
சோகிபோலே பெரும் பல்லைப்பார்!
கட்டிய கச்சையில் விட்டுச் செருகிய
கட்டை உடைவாளின் தேசுபார்! - ஆகா
கட்டை உடைவாளின் தேசுபார்!

5. பூட்டிய வில்லுங் குறிவைத்த பாணமும்
பொல்லாத பார்வையுங் கண்டதோ - உன்றன்
பொல்லாத பார்வையுங் கண்டதோ?
வாட்ட மில்லாப்பயிர் மேயவந்த பசு
வாலைக் கிளப்பிக்கொண்டோடுமே - வெடி
வாலைக் கிளப்பிககொண்டோடுமே.

6. கள்ளக் குணமுள்ள காக்கை உன்னைக் கண்டு
கத்திக் கத்திக் கரைந்தோடுமே - கூடிக்
கத்திக் கத்திக் கரைந்தோடுமே
நள்ளிரவில் வருங் கள்வனுனைக் கண்டு
நடுநடுங்கி மனம் வாடுமே - ஏங்கி
நடுநடுங்கி மனம் வாடுமே.

நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர்

### கடினமான சொற்களின் பொருள்

கறைச் சோகி — கருநிறச் சோகி
உறுமால் — தலைப்பாகை

## பயிற்சி

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. இப்பாட்டிற் கூறப்பட்டுள்ள கத்தரித் தோட்டத்துச் சேவகன் யார்?
2. இச்சேவகன் எவ்வாறு காவல் புரிகின்றான்?
3. இவன் என்னென்ன ஆயுதங்கள் வைத்திருக்கிறான்?
4. இத்தோட்டத்துக்கு வரும் பசு என்ன செய்யும்?
5. நள்ளிரவில் வரும் கள்வன் என்ன செய்வான்?

ஆ. வெற்றிடங்களை நிரப்பிப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்:


| | ஒருமை | | பன்மை |
|---|---|---|---|
| உதாரணம்: | சேவகன் | — | சேவகர் |
| | 1. கண் | — | |
| | 2. காய் | — | |
| | 3. கை | — | |
| | 4. அம்பு | — | |
| | 5. சோகி | — | |
| | 6. பயிர் | — | |
| | 7. பசு | — | |
| | 8. பல் | — | |
| | 9. பாணம் | — | |
| | 10. கள்வன் | — | |

இ. காய்கறித் தோட்டம் பற்றிப் பத்து வாக்கியங்கள் எழுதுங்கள்.

# 19. பந்து சொன்ன கதை

கோபாலனின் தந்தை அவனுக்கு ஒரு பந்து வாங்கிக் கொடுத்தார். அவன் பந்தைக் கண்டு மகிழ்ந்தான். அன்று முழுதும் அதனை அடித்து விளையாடினான். இரவு நித்திரைக்குச சென்றபோதும் அவன் பந்தைக் கைவிட வில்லை; அதனைப் பிடித்துக்கொண்டே படுத்தான். இரவு பன்னிரண்டு மணி ஆனது. பந்து கையிலிருந்து நழுவிக் கீழே விழுந்தது. அது துள்ளித் துள்ளி ஓடியது. கோபாலன் ஓடிப் போய்ப் பந்தைப் பிடித்தான்: ''ஏய், கள்ளப் பந்தே, என்னை விட்டு ஓடவா பார்க்கிறாய்? கால் இல்லாமல் ஓடுகிறாயே! எப்படி உன்னால் ஓட முடியும்?'' என்று கேட்டான்.

''அது ஒரு பெரிய கதை; சொல்லுகிறேன் கேள்'' என்று பந்து தன் கதையைச் சொல்லத்தொடங்கியது.



''அகலவத்தையில் ஓர் இறப்பர்த் தோட்டம் இருந்தது. அங்கு இறப்பர் மரங்கள் ஆயிரக் கணக்கில் நிரை நிரையாக நின்றன; தோட்டம் முழுவதும் ஒரு சோலை போல் விளங்கியது. அத்தோட்டத்தின் ஒரு புறத்திலே தொழிலாளரின் சிறிய வீடுகள் காணப்பட்டன. மற்றொரு புறத்திலே பெரியதுரை, சின்னத்துரை, கங்காணி, கணக்கப்பிள்ளை முதலியவர்களின் பெரிய வீடுகள் இருந்தன. அவற்றுக்கு அப்பாலே தொழிற்சாலை இருந்தது.

தோட்டத்து இறப்பர் மரங்களிற் பால் இருந்தது. அந்தப் பாலே இறப்பர் மரத்தின் அரிய செல்வம். தோட்டத் தொழிலாளர் அதனைச் சேர்ப்பதற்கு ஒவ்வொரு மரத்தையும் கீறிச் சிரட்டை கட்டினர்; சிரட்டையில் வடிந்திருந்த பாலை வாளிகளிற் சேர்த்தனர்; பின்னர் அதனைத் தொழிற்சாலைக்கு எடுத்துச் சென்றனர்.

தொழிற்சாலையில் உள்ளவர்கள் பாலை ஒரு பெரிய தொட்டியுள் ஊற்றினர்; தண்ணீரையும் ஒருவகை உப்பையும் சேர்த்துக் கலக்கினர்; சிறிது நேரம் கழித்து ஒருவித அமிலம் ஊற்றிக் கலக்கினர். அப்பொழுது பாலிலிருந்து நீர் பிரிந்தது. அடியில் நின்ற சுத்தமான பாலை அவர்கள் மற்றொரு தொட்டியினுள்ளே பாய்ச்சினர். ஒரு நாள் முழுவதும் பால் அங்கேயே இருந்தது. அப்பொழுது சற்று இறுக்கமானது.

''இறுக்கமான பாலை அவர்கள் உருளைகளினாற் பல முறை உருட்டிப் பதப்படுத்தினர். உருட்டிய பின் அது ஒடுக்கமான பாயைப் போற்காணப்பட்டது. சில நாள்களுக்கு உலரவிட்ட பின் வேறு ஓர் உருளையிற் போட்டு அவர்கள் உருட்டினர். அப்பொழுது அது தகடுகள் போல் ஆயிற்று. பின் அதனை வெட்டித் துண்டுகளாக்கி வேறு ஒரு தொழிற்சாலைக்கு அவர்கள் அனுப்பினர். அங்கு அந்த இறப்பரைக் கொண்டு பல பொருள்கள் செய்யப்பட்டன.

''அவ்வாறு செய்யப்பட்ட பொருள்களுள் நானும் ஒருவன். நான் காற்று நிறைந்த ஓர் உருண்டைப் பை. என்னையும் என் சகோதரர்களையும் வியாபாரி ஒருவன் வாங்கினான். அவன் எங்களைத் தன் கடையில் அழகாக அடுக்கி வைத்திருந்தான். நேற்று உன் அப்பா அங்கு வந்து என்னை வாங்கினார்; வீட்டுக்குக் கொண்டுவந்து என்னை உனக்குத் தந்தார். நான் இப்பொழுது உன்னுடைய விளையாட்டுத் தோழன். நீ என்னைக் கவனமாய் வைத்துக்கொள். முள்ளில் எறிந்துவிடாதே. அவ்வாறு எறிந்தால் என்னுள் இருக்குங் காற்றுப் போய் விடும். காற்றுப் போனால் நான் இறந்துவிடுவேன். பக்குவமாய் வைத்திருந்தால் நெடுங்காலம் உன்னோடு விளையாடுவேன்.''

இவ்வாறு கதை கூறி முடியக் காகங் கரையுஞ் சத்தங் கேட்டது. அவன் கண்ணை விழித்துப் பார்த்தான். பொழுது விடிந்துவிட்டது. பந்து படுக்கைக்கு அருகில் விழுந்து கிடந்தது. அப்பொழுது தான் கண்டது எல்லாங் கனவு என்பதனை அவன் உணர்ந்தான்.

## பயிற்சி

**அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:**

1. இறப்பர்த் தோட்டம் எங்கே இருந்தது?
2. இறப்பர்ப் பாலை எவ்வாறு எடுக்கின்றார்கள்?
3. அந்தப் பால் எவ்வாறு கட்டியாகின்றது?
4. இறப்பர்ப் பாலிலிருந்து என்னென்ன பொருள்கள் செய்கிறார்கள்?
5. உண்மையிற் பந்து இக்கதையைச் சொன்னதா?

**ஆ. பின்வருவனவற்றை நாங்கள், நீங்கள் என்பவற்றுடன் சேர்த்து வாக்கியமாக்கிப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்:**

| | |
|---|---|
| 1. பிடித்தோம் | 4. பிடித்தீர்கள் |
| 2. பிடிக்கின்றோம் | 5. பிடிக்கின்றீர்கள் |
| 3. பிடிப்போம் | 6. பிடிப்பீர்கள் |

**இ.** இறப்பர்ப் பால் பற்றிப் பத்து வாக்கியங்கள் எழுதுங்கள்.

## தவணை 2
## மாதிரி வினாக்கள்

(அ) பின்வருஞ் சொற்களுக்கு எதிர்ச்சொல் தருக.

| | |
|---|---|
| 1. சிலர் | 6. துன்பம் |
| 2. பெரிய | 7. பழம் |
| 3. வாழ்வு | 8. அசுத்தம் |
| 4. இறுதி | 9. குற்றவாளி |
| 5. இளமை | 10. மரியாதை |

(ஆ) பின்வருஞ் சொற்களுககு ஒத்தசொல் தருக.

| | |
|---|---|
| 1. விழி | 6. உணவு |
| 2. முடிவு | 7. சாதல் |
| 3. வேதனை | 8. உறுப்பு |
| 4. ஆவி | 9. கள்வன் |
| 5. இல்லம் | 10. நித்திரை |

(இ) சரியான சொல்லைத் தெரிவு செய்து, வாக்கிய மாகப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்.

1. வீட்டுக்காரரர் எங்கள் செழிப்பைக்கண்டு (மகிழ் வார் / மகிழவில்லை).
2. கிருமிகள் பூச்சி புழுக்களைவிட மிகமிக (ச் சிறியவை/ ப் பெரியவை).
3. கண்ணும் இமையாமல் நித்திரை கொள்ளாமல் காவல் (செய்கின்றான் / செய்யவில்லை).
4. ஈயரரும், நுளம்பரும் குற்றம் (செய்திருக்கி றார்கள் / செய்திருக்கவில்லை).
5. பூங்கா, நூல் நிலையம், சந்தை முதலிய எல்லாம் (பொதுச் சொத்துக்களல்ல/ பொதுச் சொத்துக்கள்).

(ஈ) பின்வருவனவற்றை வாக்கியமாக்கிப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள். நான் நேற்று விபுலாநந் தரைப் பற்றிப் (படித்தேன்).

நாம் நேற்று விபுலாநந்தரைப் பற்றி ..............

நீ நேற்று விபுலாநந்தரைப் பற்றி ..............

நீங்கள் நேற்று விபுலாநந்தரைப் பற்றி ..............

அவன் நேற்று விபுலாநந்தரைப் பற்றி ..............

அவள் நேற்று விபுலாநந்தரைப் பற்றி ............

அவர்கள் நேற்று விபுலாநந்தரைப் பற்றி ..........

(உ) இங்கே தரப்பட்டுள்ள சொற்களை வாக்கியம் ஆக்கிப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்.

1. வாழுங்காலத்தில் / இலை / உங்களுக்குத் / பூ / நாங்கள் / என்பவற்றைத் தருகின்றோம்.
2. தமிழ்மக்கள் / விபுலாநந்தர் / என்றும் / கடமைப்பட்டுள்ளனர் / தொண்டுகளுக்காகத் / ஆற்றிய.
3. அவற்றின் / மலத்தில் / ஒட்டிக்கொள்ளும் / நோய்க்கிருமிகள் / இலையான்கள் / கால்களில் / இருக்கும்போது.
4. இறந்துவிட்டாள் / ஓ / என் / மகாராசாவே / மனைவி.
5. பொதுவான / நாட்டுமக்கள் / சொத்து / எல்லோருக்கும் / பொதுச்சொத்தாகும்.

(ஊ) பின்வருஞ் சொற்களை வைத்து வாக்கியம் எழுதுக.

| | |
|---|---|
| 1. மிகமிக | 6. விம்மிவிம்மி |
| 2. துடிதுடித்தல் | 7. பழக்கவழக்கம் |
| 3. முணுமுணுத்தல் | 8. துள்ளித்துள்ளி |
| 4. விழுந்துவிழுந்து | 9. நிரைநிரை |
| 5. நடுநடுங்கல் | 10. கையும்மெய்யுமாக |

# 20. உயிர் கொடுத்த உத்தமி

ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகளுக்கு முன் இரண்டாம் இராசசிங்கன் கண்டியை ஆண்டு வந்தான்.

அந்த அரசன் காலத்தில் இலங்கையின் கரைப் பகுதியைப் போர்த்துக்கேயர் ஆண்டனர். அவர்கள் ஐரோப்பாவிலிருந்து வந்தவர்கள். அவர்களுக்கும் இராசசிங்கனுக்குஞ் சண்டை மூண்டது. அச்சண்டையில் அரசன் தோல்வியடைந்தான். தோல்வியடைந்த மன்னன் ஒளித்து ஓடினான்.

ஓடும்போது போர்த்துக்கேயர் அவனைக் கண்டுவிட்டனர்; துரத்திச் சென்றனர். ஓடிய அரசன், ஊவா மாகாணத்தில் உள்ள 'பங்கரகம்மனை' என்ற கிராமத்தை அடைந்தான்; அங்கு நின்ற ஒரு பெரிய பலா மரத்தைக் கண்டான். அதில் ஆள் நுழையக்கூடிய ஒரு பெரிய பொந்து இருந்தது. அதனுள் அவன் புகுந்து ஒளித்தான். அந்தப் பலா மரத்துக்குக் கிட்ட ஒரு மாட்டுக் கொட்டில் இருந்தது. அங்கே பசுக்கள் நின்றன. ஒரு பசுவில் முஸ்லிம் பெண் ஒருத்தி பால் கறந்து கொண்டிருந்தாள். அவள் அரசன் மரப்பொந்துள் ஒளித்ததைக் கண்டாள்.

சிறிது நேரத்தில் அரசனைத் துரத்திச் சென்ற போர்த்துக்கேய வீரர்களும் அவ்விடத்தை அடைந்தார்கள். அரசன் திடீரென மறைந்ததைக் கண்டு ஆத்திரங் கொண்டார்கள். அங்கும் இங்கும் தேடினார்கள். பக்கத்திலே பால் கறந்துகொண்டிருந்த முஸ்லிம் பெண்ணைக் கண்டார்கள். அப்பெண்ணிடம் சென்று, ''இங்கு வந்த இராசசிங்கன் எங்கே?'' என்று அதட்டிக் கேட்டார்கள்.

அவள் பயத்தால் நடுங்கினாள். முக்காட்டைச் சரிப்படுத்திக் கொண்டாள். போர்த்துக்கேய வீரர் மீண்டும் மீண்டும் அதட்டிக் கேட்டார்கள். ''கண்டேன்'' என்று சொல்லி மன்னனைக் காட்டிக் கொடுக்கவும் அந்தப் பெண் விரும்பவில்லை. ''காணவில்லை'' என்று பொய் சொல்லவும் விரும்பவில்லை. அவள் மௌனமாய் இருந்தாள்.

அதனால், அரசன் ஒளித்திருந்த இடத்தை அவர்களால் அறிய முடியவில்லை. போர்த்துக்கேய வீரர்களுக்குப் பெருங்கோபம் உண்டானது. உடனே சிறிதளவும் இரக்கமில்லாமல் அவளை வெட்டிக்கொன்றார்கள்

போர்த்துக்கேய வீரர் அங்கிருந்து சென்ற பின் இராசசிங்க மன்னன் வெளியே வந்தான். அந்த முஸ்லிம் பெண் கொல்லப்பட்டுக் கிடப்பதைக் கண்டான; பெருந்துயர் கொண்டான். "எனக்காக இவள் தன உயிரைக் கொடுத்தாளே" என்று இரங்கினான். அவள் செய்த தியாகத்தை மெச்சினான். அந்தப் பெண்மணியை அவனால் மறக்கவே முடியவில்லை.

இராசசிங்கன் மீண்டும் அரசன் ஆனான். அவளின் நினைவாக பங்கரகம்மனை' என்ற கிரர்மத்தை அவளுடைய உறவினர்களுக்குக் கொடுத்தான்.

## பயிற்சி

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. இரண்டாம் இராசசிங்கன் எந்த நாட்டு அரசன்?
2. அவனுடைய காலத்தில் இலங்கையின் கரையோரப் பகுதிகளை யார் ஆண்டனர்
3. அரசன் ஏன் ஓடி ஒளித்தான்?
4. அவன் ஒளித்திருந்ததை யாரும் அறிந்திருந்தார்களா?
5. இப்பாடத்திற் கூறப்பட்டுள்ள 'உயிர் கொடுத்த உத்தமி' யார்?

ஆ. பின்வருவனவற்றை வாக்கியமாக்கிப் பயிற்சிப் புத்த கத்தில் எழுதுங்கள்:

உதாரணம்: நான் நேற்று ஒளித்தேன் (ஒளி)

நாங்கள் நேற்று . . . . . . . . . ( ,, )
நீ நேற்று . . . . . . . . . ( ,, )
நீங்கள் நேற்று . . . . . . . . . ( ,, )
அவன் நேற்று . . . . . . . . . ( ,, )
அவள் நேற்று . . . . . . . . . ( ,, )
அது நேற்று . . . . . . . . . ( ,, )
அவை நேற்று . . . . . . . . . ( ,, )
அவர்கள் நேற்று . . . . . . . . . ( ,, )

இ. இரண்டாம் இராசசிங்கனைப் பற்றிப் பத்து வாக்கியங் கள் எழுதுங்கள்.




# 21. செங்கல் செய்யும் இடம்

அமீரும் மாமனாரும் வசு வண்டியிற் சென்று கொண்டிருந்தனர். அப்பொழுது ஓர் இடத்தில் அநேக செங்கற்கள் அடுக்கியிருப்பதை அவர்கள் கண்டனர். அதைக் கண்ட அமீர், ''மாமா, அதோ, பாருங்கள்: எவ்வளவு செங்கற்கள்! ஏன் இவற்றை அடுக்கிவைத்திருக்கிறார்கள்?'' என்றான்.

''இது செங்கல் செய்யும் இடம். விற்பனைக்காக அடுக்கிவைத்திருக்கிறார்கள்'' என்றார் மாமனார்.

''செங்கல்லை எப்படி மாமா செய்கிறார்கள்?'' என்றான் அமீர்.

''எப்படிச் செய்கிறார்கள் என்று எனக்கும் தெரியாது; இறங்கிப் பார்ப்போம்'' என்றார் மாமனார். அமீர் மணியை அடித்தான். வண்டி அடுத்த தரிப்பில் நின்றது. அவர்கள் இறங்கிச் செங்கல் செய்யும் இடத்துக்குச் சென்றார்கள்.



அது ஒரு வயல் வெளி. அவ்வெளியில் ஒரு குடிசை இருந்தது. அந்தக் குடிசையின் வாசலிற பெரியவர் ஒருவர் நின்றார். அவர்களைக் கண்டதும் "வாருங்கள்; உங்களைத் தெரியவில்லையே! உங்களுக்கு என்ன வேண்டும்?" என்றார்.

''நாங்கள் பக்கத்து ஊருக்குப் போகின்றோம். போகும் வழியிலே, செங்கல் செய்வது எப்படி என்பதை அறிவதற்காக இங்கு வந்தோம்'' என்று மாமனார் கூறினார்.

''அப்படியா? நல்லது வாருங்கள்; எல்லாவற்றையும் காட்டுகிறேன்'' என்றார் அப்பெரியவர்.

''இதென்ன பெரியவரே அங்கேயுள்ள செங்கற்கள் சிவப்பு நிறமாயிருக்கின்றன; இங்கே உள்ளவை வேறொருநிறமாக இருக்கின்றன?'' என்று அமீர் கேட்டான்.

''சிவப்பாய் இருப்பவை சுட்ட செங்கற்கள். இவை சுடப்படாதவை. அங்கே பாருங்கள்; பெரிய கிடங்குகள் காணப்படுகின்றன. அவற்றிலே மண்ணை வெட்டி எடுப்போம். எடுத்த மண்ணில் இருக்கின்ற கல், புல், பூண்டு, வேர் முதலியவற்றைப் பொறுக்குவோம். அதன் பின் தண்ணீர் விட்டு மண்வெட்டியாற் குழைப்போம்; காலால் மிதிப்போம்; பின்னர் பாயினால் மூடிவிடுவோம். சில நாள்களில் மண் பதமாகிவிடும். பதமடைந்ததும் இந்த அச்சுகளின் உள்ளே அம்மண்ணை நிரப்பிக் கல் அரிவோம். அப்படி அரிந்த கற்களைச் சில நாள்களுக்கு வெயிலிற் காய வைப்போம்'' என்றார் பெரியவர்.

''காய்ந்த பின் என்ன செய்வீர்கள்?'' என்று கேட்டான் அமீர். பெரியவர் சூளை இருக்கும் இடத்துக்கு அவர்களை அழைத்துச் சென்றார். அங்கு அரிந்த கற்கள் காய வைத்து ஒழுங்காக அடுக்கப்பட்டிருந்தன. கீழே நெருப்பு எரிந்தது. இதுதான் சூளை; இதிலேதான் கற்களைச் சுட்டு எடுப்போம். சுடும்பொழுது நன்றாக வெந்து இவை சிவப்பு நிறமடைகின்றன; செங்கற்கள் ஆகின்றன. இச்செங்கற்கள் வலிமையானவை. நீரிற்

கரையமாட்டா. இவற்றைப் பயன்படுத்திக் கட்டிடங்கள் கட்டப்படுகின்றன" என்று பெரியவர் விளக்கிக் கூறினார்.

அமீர் செங்கல் செய்யுல் முறையை அறிந்து கொண்டான்; அதனால், மகிழ்ச்சி அடைந்தான். மாமனாரும் மருமகனும் பெரியவருக்கு நன்றி கூறி, விடைபெற்றுச் சென்றனர்.

### பயிற்சி

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. வசுத்தரிப்பில் இறங்கிய அமீரும் மாமனாரும் எங்கே போனார்கள்?
2. மாமனார் பெரியவரைப் பார்த்துக் கூறியது யாது?
3. சூளை எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது?
4. செங்கற்கள் எவ்வாறு சிவப்பு நிறத்தைப் பெறுகின்றன?
5. செங்கற்கள் எத்தன்மைகளை உடையன?

ஆ. பின்வருவனவற்றை வாக்கியமாக்கிப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்:


உதாரணம்: நான் இன்று போகின்றேன் (போ)

| | | | |
|---|---|---|---|
| நாங்கள் | இன்று | ........ | ( ,, ) |
| நீ | இன்று | ........ | ( ,, ) |
| நீங்கள் | இன்று | ........ | ( ,, ) |
| அவன் | இன்று | ........ | ( ,, ) |
| அவள் | இன்று | ........ | ( ,, ) |
| அது | இன்று | ........ | ( ,, ) |
| அவை | இன்று | ........ | ( ,, ) |
| அவர்கள் | இன்று | ........ | ( ,, ) |

இ. செங்கல் எவ்வாறு செய்யப்படுகின்றது என்பது பற்றிப் பத்து வாக்கியங்கள் எழுதுங்கள்.

## 22. "கொண்டாடினான் ஒடியற் கூழ்"

கல்லடி வேலுப்பிள்ளை ஒரு புலவர். அவர் யாழ்ப் பாணத்தில் உள்ள வசாவிளான் என்னும் ஊரில் வாழ்ந் தார். அவரது வீட்டுக்குப் பக்கத்திலே பெரிய கல் ஒன்று இருந்தது. அதனால், எல்லோரும் அவரைக் கல்லடிவேலன் என்று செல்லமாக அழைத்தனர்.



சுப்பையா என்பவர் புலவரின் அருமை நண்பர் அவர் நிவிற்றிக்கொல்லை என்னும் ஊரிலுள்ள மருத்துவ சாலையில் வைத்தியராகப் பணி புரிந்தார். நிவிற்றிக் கொல்லை இரத்தினபுரிக்கு அண்மையில் உள்ளது ஒரு

நாள், புலவர் தம் நண்பரைப் பார்க்கப் புறப்பட்டார்; பல அல்லைதொல்லைப்பட்டு இரத்தினபுரியை அடைந்தார். அப்பால், நிவிற்றிக்கொல்லைக்குக் கால் நடையாகவே போனார். நேரமோ பட்டப் பகல். வெயில் நெருப்பாக எறித்தது. புலவர் மிகவும் களைத்துவிட்டார். பசி வயிற்றைக் கிள்ளியது. அவர் இடைவழியிலே தங்காது நடந்தார்; அவ்வாறு நடந்து நண்பரின் வீட்டை அடைந்தார்.

புலவரைக் கண்ட நண்பரும் மனைவியாரும் அவரை வரவேற்று உபசரித்தனர்; புலவரின் சுகநலங்களை விசாரித்தனர். வைத்தியரின் மனைவியார் புலவர் களைப்பாக இருந்ததை உணர்ந்தார். எனவே, அவர் புலவருடைய களைப்பைப் போக்க எண்ணினார். உடம்பு அலுப்புக்கு உவப்பான உணவு ஒடியற் கூழ் என்பது அவருக்குத் தெரியும். மேலும், புலவருக்கு ஒடியற் கூழில் மிக்க பிரியம் உண்டு என்பதும் அவருக்குத் தெரியும்.

வைத்தியரின் மனைவியார் கூழ் காய்ச்சத் தொடங்கினார். அவர் பானையில் நீரைக் கொதிக்கவைத்தார்; அதனுள் ஒரு சிறங்கை 'அளவு அரிசியைப் போட்டு வேக வைத்தார்; பின்பு, மரவள்ளிக் கிழங்கு, பயற்றங்காய், பயறு, பலாச் சுளை, பலாக் கொட்டை முதலியவற்றையும் போட்டார்; உப்பையும் புளியையும் அரைத்த மிளகாய்க் கூட்டையும் அளவாய்ப் போட்டார்; ஒடியல் மாவைக் கரைத்து அதனுடன் சேர்த்தார்; இவ்வாறாகக் கூழ் காய்ச்சினார்; பதமாய் இறக்கிய கூழுக்குள் வாழைக்காய்ப் பொரியலையும் இட்டுக் கலக்கினார்.

புலவரும் நண்பருங் கூழ் குடிக்க அமர்ந்தனர்; பலா இலையை மடித்துக் கோலினர்; கூழை அள்ளி, ஊதி ஊதிக் குடித்தனர். அந்தக் கூழ் மிகவுஞ் சுவையாக இருந்தது. ''என்ன அருமையான கூழ்!'' என்று வியந்தார் புலவர். புலவரின் பசியும் பறந்தது; களைப்பும் நீங்கியது.

## பயிற்சி

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. கல்லடி வேலுப்பிள்ளை எங்கு வாழ்ந்தார்?
2. கல்லடி என்று கூறுவதற்கான காரணம் என்ன?
3. இப்புலவரின் நண்பர் சுப்பையா என்பவரின் தொழில் என்ன?
4. ஒடியற் கூழ் காய்ச்சியவர் யார்?
5. புலவருக்கு ஏன் ஒடியற் கூழ் கொடுத்தார்கள்?

ஆ. பின்வருவனவற்றை வாக்கியமாக்கிப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்:

உதாரணம்: நான் நாளைக்குக் குடிப்பேன் (குடி)

| | | | |
|---|---|---|---|
| நாங்கள் | நாளைக்குக | ....... | ( ,, ) |
| நீ | நாளைக்குக் | ....... | ( ,, ) |
| நீங்கள் | நாளைக்குக் | ....... | ( ,, ) |
| அவன் | நாளைக்குக் | ....... | ( ,, ) |
| அவள் | நாளைக்குக் | ....... | ( ,, ) |
| அது | நாளைக்குக் | ....... | ( ,, ) |
| அவை | நாளைக்குக் | ....... | ( ,, ) |
| அவர்கள் | நாளைக்குக் | ....... | ( ,, ) |

இ. ஒடியற் கூழ் காய்ச்சுதல் பற்றிப் பத்து வாக்கியங்கள் எழுதுங்கள்.

# 23. தாலாட்டுப் பாட்டு

ஆராரோ ஆராரோ
ஆரிவரோ ஆராரோ

மாமணியோ முத்தோ
மரகதமோ மன்னவர்தம்
தாம முடிமீது
தயங்கும் வயிரமதோ.



கற்கண்டு சீனி
கனியுங் கனிந்தொழுகு
சொற்கொண்டு எமக்குச்
சுகமளிக்கும் பூங்குயிலோ.

ஆரடித்து நீஅழுதாய்
அடித்தாரைச் சொல்லிஅழு
சீரெடுத்த செல்வச்
சீமான் திருக்குமரா

பாலை விரும்பினையோ
பணிகாரம் வேண்டினையோ
சோலைப் பசுங்கிளியே
சுந்தரமே சொல்லிஅழு.

சப்பாணி கொட்டித்
தளர்ந்தனையோ அல்லதுன்றன்
கைப்பாலைக் காகக்
கலங்கி அழுதனையோ.

கண்ணுறங்கு கண்ணுறங்கு
கண்மணியே கண்ணுறங்கு
ஆராரோ ஆராரோ
ஆரிவரோ ஆராரோ.

தேசிகவிநாயகம்பிள்ளை

## பயிற்சி

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. மாமணி, முத்து, மரகதம், வயிரம் ஆகியவை பார்ப்பதற்கு எவ்வாறிருக்கும்?
2. கற்கண்டு, சீனி ஆகியவற்றின் சுவை என்ன?
3. குயில் என்ன செய்யும்?
4. குழந்தை அழுவதற்குத் தாய் கூறும் காரணங்கள் மூன்று கூறுக.
5. குழந்தையின் தாய் எதற்காக இப்பாட்டைப் பாடுகின்றார்?

ஆ. பின்வருவனவற்றை அவை, அவர்கள் என்பவற்றுடன் சேர்த்து வாக்கியமாக்கிப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்:

1. அழுதன 3. அழும் 5. அழுகின்றார்கள்
2. அழுகின்றன 4. அழுதார்கள் 6. அழுவார்கள்

இ. இந்தப் பாட்டுக்களிற் கூறியவற்றைப் பத்து வாக்கியங்களில் எழுதுங்கள்.

# 24. யார் பழந் தின்பார்கள்?

முருகேசர் ஒரு கிழவர். பற்கள் எல்லாம் விழுந்து விட்டன. தலையோ நரைத்துவிட்டது. உடல் தளர்ந்து விட்டது. என்றாலும் சுறுசுறுப்புக் குறையவில்லை. பொல்லையும் ஊன்றிக்கொண்டு எந்த நேரமும் யாதேனும் வேலை செய்துகொண்டிருப்பார். பொல்லும் கையுமாக உலாவினாலும் அவர் பொல்லாதவர் அல்லர்; மிகவும் நல்லவர்.

ஒரு நாட் பின்னேரம் முருகேசர் தமது தோட்டத்தைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டார். அதற்கு முதல் நாட் சிறு மழை பெய்திருந்தது. நில ஈரம் காயவில்லை. ''இந்த ஈரம் போதும்; இன்றைக்கு இறைக்கத் தேவையில்லை'' என்று அவர் தமக்குள் முணுமுணுத்தார்.

தோட்டத்தில் நின்ற பயிர்களை அவர் ஆசையோடு பார்த்தார். தம்முடைய பிள்ளைகளைப் பரிவுடன் பார்ப்பது போல, அந்தப் பயிர்களையும் அவர் பார்த்து மகிழ்ந்தார்

முருகேசருடைய தோட்டத்துக்கு அருகில் ஒரு தெரு இருந்தது. அந்தத் தெரு இருக்கும் பக்கமாக ஒரு மாங்கன்றை நட விரும்பினார். அந்த விருப்பம் அவருடைய மனத்தில் நெடுநாளாய் இருந்தது.

''இன்று வேறொரு வேலையும் இல்லை. மாங்கன்றை நடலாமே'' என்று அவர் நினைத்தார்; கிணற்றடிக்குப் போனார். அவர் நட நினைத்த மாங்கன்று அங்கே நின்றது. மாங்கன்றை எடுத்துக்கொண்டு அவர் தெருப் பக்கமாகச் சென்று, தமது தோட்டத்திற்குள் அதனைப் பக்குவமாக நாட்டினார்; தாராளமாகத் தண்ணீர் ஊற்றினார்; ஆடு, மாடு கடிக்காதவாறு அதனைச் சுற்றி ஒரு கூடு கட்டத்தொடங்கினார்.

தெருவால் நடந்து சென்ற மோகன் முருகேசரைக் கண்டான். ''தாத்தா, சுகமாக இருக்கிறீர்களா?'' என்று அவன் கேட்டான்.



முருகேசருக்கு மோகனை நன்றாகத் தெரியும். அவரு டைய பேரனின் வகுப்பிலேதான் மோகனும் படிக்கி றான். ''ஓ, தம்பி மோகனா? வா, வா; வெண்டிக்காய் ஆய்ந்து தருகிறேன்; கொண்டுபோய் உன் அம்மாவிடங் கொடு'' என்றார் முருகேசர்.

''அது சரி தாத்தா, நீங்கள் என்ன செய்கிறீர்கள்?''

''நானா? நான் மாங்கன்று நடுகின்றேன்''

''இந்த வயதில் மாங்கன்றா நடுகின்றீர்கள்? இது பெரிய வேடிக்கை'' என்று சொல்லிச் சிரித்தான்.

''என்ன தம்பி, கடுமையாய்ச் சிரிக்கிறாய். 'ஆளோ குடு குடு கிழவர்; இன்றைக்கோ, நாளைக்கோ செத்துப் போவார்; செத்த பிறகு இவர் மாம்பழம் தின்ன முடியாதே' என்று தானே சிரிக்கிறாய்?''

''ஆம் தாத்தா. நீங்கள் நடும் மரத்தின் பழங்களை வேறு யாரோ தான் சாப்பிடப்போகிறார்கள். அப்படி யிருக்க இந்த வயதிலே ஏன் இவ்வளவு பாடுபடுகிறீர் கள்?'' என்றான் மோகன்.

மோகனின் கேள்வி முருகேசருக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணவில்லை. அவர் மோகனை அன்போடு பார்த்தார்.

''தம்பி, நல்ல கேள்வி கேட்டாய். இந்த மாங்கன்றை நான் ஏன் நடுகிறேன். இதன் பழங்களைப் பறித்துச்

சாப்பிடும் விருப்பத்தாலா? இல்லை. நிச்சயமாக இல்லை எங்கள் வளவிலே ஏராளமான மாமரங்கள் உண்டு. அவற்றில் சிலவற்றை என் தந்தையார் நட்டார்; சிலவற்றை என பாட்டனார் உண்டாக்கினார். இன்று நாங்கள் உண்ணும் பழங்கள் முன்னோர் செய்த முயற்சியின் பயனாகவே கிடைக்கின்றன'' என்று முருகேசர் கூறிக்கொண்டே இருந்தார்.

''அப்படியானால், உங்கள் பிள்ளைகளையும் பேரப் பிள்ளைகளையும் நினைத்துத் தானா, நீங்கள் இந்த மாங்கன்றை நடுகிறீர்கள்?'' என்று மோகன் கேட்டான்.

''ஆம் மோகன்; அவர்களோடு என் அயலவரையும் நினைக்கிறேன்; இந்த ஊரவர்களையும் நினைக்கிறேன்'' என்று முருகேசர் சொன்னார்.

கிழவரின் பேச்சு மோகனின் இள மனத்தில் ஆழமாகப் பதிந்தது. முருகேசர் இவ்வளவு நல்ல கிழவர் என்பது அவனுக்குத் தெரியாது. அன்று தான் அவன் அதனை அறிந்தான்.

முருகேசர் வெண்டிக்காய்கள் சிலவற்றைப் பிடுங்கினார்; வாழை இலையிற் சுற்றி மோகனிடங் கொடுத்தார். மோகன் அவற்றை வாங்கினான்; ''பெரிய உபகாரம் தாத்தா'' என்று நன்றி கூறிச் சென்றான்.

முருகேசர் பொல்லையும் ஊன்றியபடி வீட்டுக்குச் சென்றார். மோகன் அன்று தொடக்கந் தானும் மரங்கள் நடத் தொடங்கிவிட்டான்.

## பயிற்சி

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. முருகேசர் என்பவர் யார்?
2. அவர் என்ன தொழில் செய்பவர்?
3. மோகன் பார்க்கும்பொழுது முருகேசர் என்ன செய்துகொண்டு இருந்தார்?

4. மோகன் ஏன் சிரித்தான்?

5. யார் பயன் பெறுவதற்காகக் கிழவர் மாங்கன்று நட்டார்?

ஆ. பின்வரும் வாக்கியங்களுக்கு எதிர்மறைக் கருத்துள்ள வாக்கியங்கள் எழுதுங்கள்.

உதாரணம்: முருகேசர் சுறுசுறுப்பு உள்ளவர்.
முருகேசர் சுறுசுறுப்பு இல்லாதவர்.

1. முருகேசர் ஒரு குமரர்.
2. அவர் தம்முடைய தோட்டத்துக்குப் போனார்.
3. மோகன் மாம்பழம் உண்டான்.
4. அவருக்கு மோகனைத் தெரியும்.
5. முருகேசர் தாம் மாம்பழம் உண்பதற்காக மாங்கன்று நட்டார்.

இ பின்வரும் பந்தியைப் பார்த்து உங்கள் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள். இப்பந்தியில் உள்ள இடைவெளிகளைப் பயிற்சிப் புத்தகத்தில் நிரப்புங்கள்:

முருகேசர் என்னுங் கிழ ........ ஒரு தோட்டம் இருந்தது. அவர் ஒரு நாள் பின்னேரம் அங்கு போ ....... அங்கு நின்ற பயிர்களை அவர் ஆசையோடு பார் ........ அவருடைய தோட்டத்திக்கு அருகில் ஒரு ........ இருந்தது. அந்தத் தெருப் பக்கமாக ஒரு ........ நடுவதற்கு முருகேசர் ...... அவர் நட நினைத்த ...... கிணற்றடியில் .... ....... அம்மாங்கன்றை கிளப்பிக் கொண்டு .... ......... தெருப் பக்கமாகச் ......... தோட்டத்திற்குள்ளே தெருக் கரையில் மாங்கன்றை .... ...... அதற்கு ........ தண்ணீர் ........ பின்னர் ......... கூடு ஒன்று கட்டத் .......

## 25. குற்றஞ் செய்யாதவர் யார்?

இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன், எருசலேம் நகரில் இயேசுநாதர் வாழ்ந்து வந்தார். அவர் மக்கள் போற்றும் மாபெருந் தீர்க்கதரிசியாக விளங்கினார்; ஊர் ஊராகச் சென்று போதனை புரிந்தார்; கடவுளைப் பற்றியும் நல்லொழுக்கம் பற்றியும் நீதிநெறி பற்றியும் மக்களுக்கு எடுத்துக் கூறினார்; அன்பின் பெருமையை விளக்கிப் பிரசங்கஞ் செய்தார். எல்லோரும் அவரைப் புகழ்ந்தார்கள்; அவருடைய அருளுரைகளை ஆர்வத்துடன் கேட்டார்கள்.

அவர் சென்ற இடமெல்லாம் திரள்திரளாக மக்கள் கூடினர், அவரைச் சூழ்ந்து நின்றனர்; அவருடைய போதனைகளைப் பத்தியுடன் கேட்டனர்; பயன் பெற்றனர். உண்மை நெறிக்கு மாறாக வாழ்ந்த சிலர், அவர் மேல் வெறுப்புக் கொண்டனர்.

ஒரு நாள், காலை வெயில் 'தகதக' என்று எறித்தது. மரங்களின் இலைகளிலிருந்து பனித் துளிகள் சொட்டிக் கொண்டிருந்தன. பறவைகள் ஒலி எழுப்பிப் பறந்து சென்றன. மக்கள் தத்தம் தொழில்களுக்குச் சென்றனர். 'ஒலிவ் மலைச்சாரல் அழகுடன் பொலிந்தது.

இயேசுநாதர் ஒலிவ் மலையின் அடிவாரத்தில் உள்ள ஆலயத்துக்குச் சென்றார். அன்பு மிகுந்த மனத்துடன் மக்கள் அங்கு கூடியிருந்தனர்; அமைதியாக அவருடைய அருளுரைகளைக் கேட்டனர்.

அவரை வெறுத்த சிலர் அப்பொழுது அங்கு வந்தார்கள். அவர்கள் ஓர் ஏழைப் பெண்ணைப் பிடித்து இழுத்து வந்து அவர்முன் நிறுத்தினார்கள்: ''போதகரே, இப் பெண் கெட்டவள்; பொய் சொல்லி ஏமாற்றுகிறவள்; இன்று இவள் கையும் மெய்யுமாகப் பிடிபட்டுவிட்டாள்; இவளுக்கு நல்ல தண்டனை கொடுக்க வேண்டும்'' என்று கூறினார்கள்.

இயேசுநாதர் ஒன்றும் பேசவில்லை; அமைதியாக இருந்தார்; யாரையும் நிமிர்ந்து பார்க்கவில்லை. ஏழைப்



பெண்ணை இழுத்து வந்த முரடர்கள் அன்பின் பெருமையை அறியாதவர்கள்; அவர்கள் மேல் இயேசுநாதருக்கு இரக்கம் உண்டாயிற்று. ஆனால், இயேசுநாதர் மேல் முரடர்களுக்குக் கோபம் உண்டாயிற்று. ''போதகரே, ஏன் பேசாமல் இருக்கிறீர்?'' என்று அவர்கள் கேட்டார்கள்.

இயேசுநாதர் அவர்களை நிமிர்ந்து பார்த்தார். அவருடைய முகம் சாந்தமாக இருந்தது. அப்பொழுது, ''குற்றஞ் செய்கிறவர்களைத் தண்டிக்கத்தான் வேண்டும். அதுவே நீதி. ஆனால், குற்றம் ஒன்றுமே செய்யாத ஒருவரே தண்டனையைக் கொடுக்க வேண்டும். இன்று வரை குற்றம் செய்யாத ஒருவர் உங்களில் யார்? அவர் முன்னால் வரவேண்டும்'' என்று அவர் கூறினார். ஒருவரும் முன்னால் வரவில்லை. இயேசுநாதர் குனிந்து அமைதியாக இருந்தார். சிறிது நேரம் சென்றது. அவர் நிமிர்ந்து பார்த்தார்; நாற்புறமும் பார்த்தார். அந்தப் பெண்மட்டுமே அங்கு நின்றாள். வேறு யாரும் இல்லை.

'பெண்ணே, உன்னைக் குற்றம் சொன்னவர்கள் யாருமே நல்லவர்கள் அல்லர். அதனால், உன்னைத் தண்டிக்க முடியாமல் ஓடிவிட்டார்கள். உன் குற்றங்கள் மன்னிக்கப்பட்டன. இனி, நீ குற்றம் செய்யாது வாழ்வாயாக'' என்று இயேசுநாதர் கூறினார். அப்பெண் இயேசுநாதரை வணங்கி விடைபெற்றுச் சென்றாள்.

## பயிற்சி

அ. **பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:**

1. இயேசுநாதர் எந்த நகரில் வாழ்ந்தார்?
2. அவர் மக்களுக்கு என்ன செய்தார்?
3. ஏழைப் பெண்ணை இழுத்து வந்தவர்கள் எத்தகையவர்கள்?
4. அந்த ஏழைப் பெண் மீது சாட்டப்பட்ட குற்றம் என்ன?
5. போதகர்கள் என்ன செய்வார்கள்?

ஆ. **இந்த எழுத்துக்களைக் கொண்டு ஆக்கக் கூடிய சொற்களைப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்:**

| | |
|---|---|
| 1. புத்மகத | படிம்போப் |
| 2. மகிசிச்ழ் | அடைய்தாந் |
| 3. விரும்பப் | இருதுதந் |

இ. **பின்வரும் பந்தியைப் பார்த்து உங்கள் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள். இப்பந்தியில் உள்ள இடைவெளிகளைப் பயிற்சிப் புத்தகத்தில் நிரப்புங்கள்:**

இயேசுநாதர் அவர்களை நிமிர்ந்து . . . . . . . . அவருடைய முகம் . . . . . . . . . . . இருந்தது. அப்பொழுது, ''குற்றஞ் செய்கின்றவர்களை . . . . . . . . . வேண்டும். ஆயின், குற்றம் ஒன்றுமே . . . . . . . . ஒருவரே தண்டனை . . . . . . . . வேண்டும். குற்றஞ் செய்யாத . . . . . . . . . . உங்களில் யார்? . . . . . . . . முன்னால் . . . . . . . . . .

# 26. பாடசாலைத் தோட்டம்

"என்ன கந்தப்பர் இந்தப் பக்கம் இன்று வந்திருக்கிறீர்கள்? என்ன விசேடம்" என்று ஆவலுடன் கேட்டார் ஆதம்பாவா.

''பாவா! இந்தப் பாடசாலையில் என் மகன் படிக்கிறான். பாடசாலை மாணவர்கள் இங்கே தோட்டம் செய்கிறார்களாம். அதைப் பற்றி நன்றாகச் சொல்லுகிறான்'' என்றார் கந்தப்பர்.

''என் மகனும் இங்கேதான் படிக்கின்றான். அவனும் உங்களுடைய மகனைப் போலவே சொல்லுகிறான்'' என்றார் பாவா.

''நல்லது பாவா! வாருங்கள்; இப்போதே போய்ப் பார்த்துவிட்டு வருவோம். தலைமை ஆசிரியர் எனக்குத் தெரிந்தவர்'' என்று கந்தப்பர் சொன்னார்.

கந்தப்பரும் ஆதம்பாவாவும் தம் ஊரான சம்மாந்துறையிலுள்ள அப்பாடசாலைக்குச் சென்றனர்; அதிபரிடந் தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தனர். அதிபர் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்; பாடசாலைத் தோட்டத்தைச் சுற்றிக் காண்பித்தார்.

''பெரிய தோட்டமாய் இருக்கிறதே! நாலு ஏக்கர் இருக்குமோ?'' என்றார் கந்தப்பர்.

''சரியாகச் சொன்னீர்கள். நாலு ஏக்கர் தான். முன்பு இந்த இடம் பற்றையாக இருந்தது. மேல் வகுப்பு மாணவர் பற்றைகளை வெட்டி எரித்தனர். சுற்றிவர வேலி அடைத்தனர். இந்தத் தோட்டத்திற் கூட்டு முயற்சியாக வேலை நடைபெறுகிறது. எல்லா வகுப்பு மாணவர்களும் இங்கு வேலை செய்கிறார்கள்.'' என்று அதிபர் கூறினார்.

"எல்லா வகுப்பு மாணவர்களுமா? அது எவ்வாறு முடியும்?" என்று பாவா கேட்டார்.

அதற்கு எங்களிடந் திட்டம் ஒன்று உண்டு. ஒவ்வொரு வகுப்பு மாணவரும் ஒவ்வொரு வகையான வேலையைச் செய்வார்கள். உயர்நிலை வகுப்பு மாணவர்



கள் கொத்துதல், பாத்தி அமைத்தல் முதலிய கடினமான வேலைகளைச் செய்வார்கள். இடைநிலை வகுப்பு மாண வர்கள், நீர் பாய்ச்சுதல், பயிர் நடுதல், பசளையிடுதல் முதலிய வேலைகளைச் செய்வார்கள். ஆரம்ப நிலை வகுப்பு மாணவர்கள் களைபிடுங்குதல், நிழலிடுதல் முதலிய இலகுவான வேலைகளைச் செய்வார்கள்'' என்று அதிபர் சொன்னார்.

''இந்தத் தோட்டத்தை உண்டாக்க அதிக பணஞ் செலவாகியிருக்குமே?'' என்று கந்தப்பர் கேட்டார்.

''இது தான் இங்குள்ள சிறப்பு. ஒரு சதங்கூட நாங் கள் இதற்காகச செலவு செய்யவில்லை. விதைகளையும் நாற்றுகளையும் பெற்றோர் தந்தனர். மண்வெட்டி, வாளி முதலியவற்றை அரசாங்கம் தந்தது. எருவை மாணவர்கள் சேகரித்தனர்'' என்றார் அதிபர்.

''அப்படியா, நல்ல முயற்சிதான். எல்லாப் பயிர் களும் வைத்திருக்கிறீர்கள் போல் இருக்கிறதே. வெண்டி.

மிளகாய், வெங்காயம், மரவள்ளி, கத்தரி, தக்காளி முதலிய எல்லாம் இருக்கின்றனவே!'' என்று பாவா கூறினார்.

''அடுத்த பருவத்தில் உழுந்தும் பயறும் குரக்கனும் பயிரிட நினைத்திருக்கிறோம். சோயா அவரையும் பயிரிடும் எண்ணம் உண்டு' என்றார் அதிபர்.

''எல்லாப் பயிர்களும் நன்றாகச்செழித்து வளர்ந்திருக்கின்றன. நல்ல வருவாய் இருக்குமே!'' என்று கந்தப்பர் கேட்டார்.

''ஆமாம்; நல்ல வருவாய் வருகிறது. பல பெற்றோர்கள் வாடிக்கையாக எம்மிடம் காய்கறி வாங்குகிறார்கள். மிகுதியை வியாபாரிகள் வந்து வாங்குகிறார்கள். இந்தப் பணம் பாடசாலையை விருத்திசெய்ய உதவுகிறது'' என்று அதிபர் கூறினார்.

''இது சிறுபிள்ளைகள் செய்யுந் தோட்டந்தானே என்று நாங்கள் நினைத்து வந்தோம். அருமையான தோட்டமாக இருக்கிறதே! இவற்றை விளக்கமாகக் கூறியதற்கு நன்றி. நாங்கள் போய் வருகிறோம்'' என்று கந்தப்பர் விடைபெற்றார்.

கந்தப்பரும் ஆதம்பாவாவும் திரும்பிப் போகும் பொழுது, பாடசாலைத் தோட்டத்தைப் புகழ்ந்து பேசிக் கொண்டே போனார்கள்.

நல்லதுதான், கந்தப்பரே, ஆனால் மாணவர்களின் படிப்புத்தான் ஒழுங்காக நடைபெறாது. அவர்களுடைய கவனம் முழுவதுந் தோட்ட வேலையிலேதான் இருக்கும்'' என்று பாவா கூறினார்.

''என்ன பாவா, அப்படிச் சொல்லிவிட்டீர்கள்? புத்தகத்திற் படிப்பது மட்டுந்தானா படிப்பு? தொழிற் பயிற்சியும் படிப்புத்தானே. தொழில்கள் செய்து கற்றுக் கொள்ள வேண்டிய நுட்பங்கள் ஏராளமாக இருக்கின்றன'' என்றார் கந்தப்பர்.

''அது மெய்தான் கந்தப்பரே என் மகன் எட்டாம் ஆண்டில் படிக்கிறான். பெரிய நிபுணனைப் போல, சைக்கிள், மணிக்கூடு, பெற்றோமக்ஸ் முதலியவைகளைத் திருத்திக் கொடுக்கிறான்'' என்றார் பாவா.

''அப்படியா? நீங்கள் அவனை ஊக்கப்படுத்த வேண்டும். இளமையில் ஏதோ ஒரு வேலையை முறைப்படி பழகிக்கொள்ளவேண்டும். அந்தப் பழக்கம் பிற்காலத்தில் மிகவும் பயன்படும். வளர்ந்த பின் உங்கள் மகன் செய்யப்போகும் எந்தத் தொழிலுக்கும் அந்த ஆரம்பப் பழக்கம் உதவும்'' என்று கந்தப்பர் கூறினார்.

''நீங்கள் சொல்லுவது உண்மைதான்'' என்று கூறித் தலையை அசைத்துக் கொண்டு ஆதம்பாவா அப்பாலே போனார்.

## பயிற்சி

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. கந்தப்பரும் ஆதம்பாவாவும் எந்த ஊரைச் சேர்ந்தவர்கள்?
2. அவர்கள் ஏன் பாடசாலைக்குப் போனார்கள்?
3. பாடசாலை அதிபர், அவர்களுக்குப் பாடசாலைத் தோட்டம் பற்றி என்ன விளக்கம் அளித்தார்?
4. எல்லா வகுப்பு மாணவர்களும் எவ்வாறு தோட்ட வேலையிற் பங்கு பற்றுகின்றார்கள்?
5. தொழிற் பயிற்சி என்பது என்ன?

ஆ. இந்த எழுத்துக்களைக் கொண்டு ஆக்கக்கூடிய சொற்களைப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்:

| | |
|---|---|
| 1. தோடட்ம | 6. எகங்ள |
| 2. பாசாடலை | 7. எப்டிப |
| 3. ஏகர்க் | 8. முடிம்யு |
| 4. முற்சிய | 9. திடம்ட |
| 5. வப்புகு | 10. மாவணர் |

இ. உங்கள் பாடசாலையைப் பற்றிப் பத்து வாக்கியங்கள் எழுதுங்கள்.

# 27. உழைப்பில் நேர்மை

அராபியா நாட்டிலே கூபா என்னும் ஓர் ஊர் உண்டு. முற்காலத்தில் அங்கே நுஃமான் என்னும் பெரியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் மிகுந்த நேர்மை உடையவர்; நல்ல கல்விமான்; சிறந்த பேச்சாளர் அவர் கௌரவம், பதவி, செல்வம் முதலியவற்றில் ஆசை இல்லாதவர்; இறைவன் மேல் மிகுந்த பயபக்தி உடையவர். அவர் பல தொழில்களுடன் வியாபாரமுஞ் செய்துவந்தார.

ஒரு நாள் அவர் வியாபாரத்திற்காகச் சில புடைவை களை வாங்கினார். அவற்றுள் ஒரு புடைவையிற் குறை பாடு இருந்தது. புடைவைகள் எல்லாவற்றையும் விற்ப தற்காக வியாபாரி ஒருவனிடங் கொடுத்தார் அவற்றைக் கொடுக்கும்பொழுது, குறைபாடு உள்ள புடைவையை வாங்குபவருக்குக் காட்டியே விற்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அந்த வியாபாரி புடைவைகளை விற்றான். பின்னர் விற்ற பணத்தைக் கொண்டுவந்து அப்பெரியாரிடங் கொடுத்தான். உடனே அப்பெரியார் ''புடைவை யிலுள்ள குறைபாட்டை வாங்கியவரிடங் காட்டினா யா'' என்று கேட்டார். அந்த வியாபாரி ''அவ்வாறு செய்யமறந்து விட்டேன்'' என்று கவலையுடன் கூறி னான். அதனைக் கேட்ட அப்பெரியார் ''அப்படியா னால் அப்புடைவைகள் விற்ற பணத்தை நான் பயன் படுத்த முடியாது. அதனை இறைவன் விலக்கியுள்ளான். அப்புடைவையை வாங்கியவர் யார்? அவரைக் கண்டு பிடிக்க முடியுமா?'' என்று கேட்டார். அதற்கு அவ்வியா பாரி ''அப்புடைவையை வாங்கியவரை எனக்குத் தெரி யாது'' என்று விடை கூறினான். அப்பொழுது அந்தப் பெரியார் ''அப்படியானால் அந்தப் புடைவைகள் விற்ற பணம் முழுவதையுமே தானஞ் செய்துவிடு; அவ்வாறு செய்தால் குறைபாடுடைய அந்தப் புடைவையை

வாங்கியவரின் பணத்தாற் செய்யுந் தானத்தின் பயன் அவருக்கே கிடைக்கும்' என்று கூறி, அந்த வியாபாரியிடம் அப்பணம் முழுவதையுந் திருப்பிக் கொடுத்தார்.

''பொய் சொல்லியோ, பிறரை ஏமாற்றியோ பணந் தேடலாகாது. உழைக்காமற் சோம்பலாக இருத்தலுந் தவறு. களவு, சூதாடல் போன்ற தீய வழிகளாற் பணம் ஈட்டலும் ஆகாது. இவை எல்லாம் இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படாதவை. நாம் இவற்றைச் செய்தால் இறைவன் நம்மைத் தண்டிப்பான்'' என்று அப்பெரியார் அவனிடங்கூறினார்.

## பயிற்சி

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. நுஃமான் என்பவர் எங்கு வாழ்ந்தார்?
2. அவர் எத்தகையவர்?
3. குறைபாடு உள்ள புடைவையை எவ்வாறு விற்க வேண்டும் என்று அவர் வியாபாரிக்குக் கூறியிருந்தார்?
4. வியாபாரி அதனை எவ்வாறு விற்றான்?
5. நுஃமான் என்னும் பெரியார் ஏன் அப்பணத்தை ஏற்றுக்கொள்ளவில்லை?

ஆ. பின்வரும் எழுவாய்களுக்குப் பொருத்தமான பயனிலைகளைத் தெரிவுசெய்து வாக்கியமாகப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்:

நான், நாம், யாம், நாங்கள், நீ, நீர், நீங்கள், அவன், அவள், அவர்கள், அது, அவை.

ஓடினேன், ஓடின, ஓடியது, ஓடுகின்றோம், ஓடினோம், ஓடுவோம், ஓடுகின்றான், ஓடுகின்றீர், ஓடினாய், ஓடுவீர்கள், ஓடுவார்கள், ஓடினான்.

இ. இக் கதையிலிருந்து நீங்கள் கற்றுக் கொண்ட படிப்பினைகளை எழுதுக.

# 28. கொன்றை வேந்தன்

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
3. இல்லற மல்லது நல்லற மன்று.
4. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
5. உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு.
6. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
7. எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்.
8. ஏவா மக்கள் மூவா மருந்து.
9. ஐயம் புகினும் செய்வன செய்.
10. ஒருவனைப் பற்றி ஒரகத் திரு.
11. ஓதலி னன்றே வேதியர்க் கொழுக்கம்.
12. ஔவியம் பேசுத லாக்கத்திற்கழிவு.

## கடினமான சொற்களின் கருத்து

முன்னறி – முதலில் அறிந்த; சாலவும் – மிகவும்; இல்லறம் – குடும்ப வாழ்க்கை; ஈயார் – கொடாதவர்; தேட்டை – செல்வத்தை; தீயார் – கெட்டவர்; உண்டி – உணவு; பெண்டிர் – பெண்கள்; ஏவா மக்கள் – சொல்லாமலே கடமையைச் செய்யும் பிள்ளைகள்; மூவா மருந்து – அமிழ்தம்; ஐயம் புகினும் – பிச்சைஎடுக்கினும்; செய்வன செய் – கடமைகளைச் செய்; அகம் – வீடு; ஓதல் – வேதத்தைச் சொல்லுதல்; ஆக்கம் – செல்வம். ஔவியம் பேசுதல் – பொறாமை கொண்டுபேசுதல்.

## பயிற்சி

அ. சரியான சொற்களைத் தெரிவுசெய்து வாக்கியமாகப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்

1. நாம் முன்னறிந்த தெய்வம் ________
(தாயும் தந்தையும்,அண்ணாவும் அக்காவும் பாட்டனும் பாட்டியும்)
2. எமக்குக் கண் போன்றவை ________
(நீரும் உணவும், கணிதமும் மொழியும், பாலும் பழமும்
3. மிகவும் நன்மை தருவது________
(கடவுளைத் தொழுவது, எப்பொழுதும் விளையாடுவது, அதிகம் உண்பது)
4. ஆக்கத்துக்கு அழிவு தருவது________
(பொறாமை கொள்ளல், உண்மை பேசுதல், நன்மை செய்தல்)
5. கொன்றை வேந்தன் எழுதியவர்________
(வள்ளுவர், ஔவையார், பாரதியார்)

ஆ. இடைவெளிகளை நிரப்பி, வாக்கியமாகப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்:

1. ________தொழுவது________நன்று.
2. ஈயார்________தீயார்________.
3. ________புகினும்________செய்.
4. ________எழுத்தும்________தகும்.
5. ________சுருங்குதல்________கழகு.

இ. ஔவையாரைப் பற்றிப் பத்து வாக்கியங்கள் எழுதுங்கள்.

## மாதிரி வினாக்கள்

1. 1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சொல் தரப்பட்டுள்ளது. கீழே தரப்பட்டுள்ள சொற்களின் நிரலிலிருந்து அவற்றுக்கு ஒத்த கருத்துடைய ஒரு சொல்லையும் எதிர்க் கருத்துடைய ஒரு சொல்லையும் தெரிவு செய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

| | ஒத்த கருத்துச் சொல் | எதிர்க் கருத்துச் சொல் |
|---|---|---|
| (1) நண்பன் | ........ | ........ |
| (2) சிரித்தான் | ........ | ........ |
| (3) அமர்ந்தான் | ........ | ........ |
| (4) இறுதி | ........ | ........ |
| (5) பழம் | ........ | ........ |
| (6) உண்மை | ........ | ........ |
| (7) இருள் | ........ | ........ |
| (8) அண்மை | ........ | ........ |

அழுதான், முடிவு, நகைத்தான், மெய், இருட்டு, காய், தொடக்கம், எழுந்தான், சினேகிதன், அருகு, இருந்தான், கனி, பொய், ஒளி, சேய்மை, பகைவன்.

2. பின்வரும் சொற்களுள் ஒன்று வேறுபட்டது. அதன் கீழ்க் கோடிடுக.

(1) நித்திரை, துயில், துகில், உறக்கம்.
(2) மலர், கனி, பூ, புஷ்பம்
(3) நிலா, மதி, சந்திரன், நட்சத்திரம்.
(4) கண், விழி, இமை, நயனம்.
(5) மன்னன், கோன், அமைச்சன், அரசன்.
(6) பூஞ்சோலை, கானகம், பூங்கா, நந்தவனம்.
(7) குற்றம், தவறு, பிழை, அநீதி.

3. மாறியிருக்கும் சொற்களை ஒழுங்குபடுத்தி வசனமாக்கி எழுதுக.

(1) விழுந்து, அரசனும், சிரித்தார்கள், அரசியும், விழுந்து.

(2) பாலை, தொட்டியுள், தொழிலாளர், ஊற்றி னர், பெரிய.

(3) சுற்றி, புறப்பட்டார், முருகேசர், தோட் டத்தை, பார்க்க.

(4) மாபெரும், இயேசுநாதர், ஆவார், தீர்க்க தரிசி.

(5) இயேசுநாதர், போதனை, சென்று, ஊர், புரிந்தார், ஊராக.

(6) உண்டு, அதிக, அரசனுக்கு, அன்பு, அபூ நவாஸிடம்.

(7) பகைத்தான், ஊருடன், கெடும், வேருடன்.

4. அடைப்புக்குள் இருக்கும் சொற்களின் சரியான சொல்லைத் தெரிவு செய்து வாக்கியங்களைப் பூரணப்படுத்துக.

(1) தைப்பொங்கல் (உளவர், உலவர், உழவர்) களின் திருநாளாகும்.

(2) ஔவையார் (அறிவாழிகளோடு, அறிவாளி களோடு, அறிவாலிகளோடு) பழகினார்.

(3) சித்தார்த்தரும் தேவதத்தனும் (அரண் மனை, அரன்மனை, அரண்மணை) த் தோட் டத்தில் விளையாடுவது வழக்கம்.

(4) வெப்பமான காலத்தில் நாம் (இழநீரை, இளனியை, இளநீரை) விரும்பிக் குடிப் போம்.

(5) சந்திரனின் தமக்கை (பாவக்காயை, பாகற் காயை, பாகக்காயை) ப் பொரித்துச் சாப் பிடுவாள்.

(6) எனது பாடசாலையில் (முன்னூறு, முன் நூறு, முண்நூறு) மாணவர்கள் படிக்கின்ற னர்.

(7) அம்மா ஒடியற்கூழ் (காச்சினார், காய்ச்சி னார், காட்சினார்).

(8) வியாபாரி (புடவை, புடைவை, பிடவை) விற்றான்.

5. பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்திலுள்ள சொற்களைப் பன்மையாக்கி எழுதுக.

(1) நான் மாலையில் விளையாடுவேன்.

(2) அது பறந்து போய்விட்டது.

(3) அவன் பொங்கல் உண்டான்.

(4) கள்வன் பொலிசாரிடம் அகப்பட்டான்.

(5) நீ நாளைக்கு வருவாயா?

6. பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்திலுள்ள சொற்களை எதிர்மறையாக்கி எழுதுக.

உ-ம்: நான் விளையாடப் போகிறேன்.
நான் விளையாடப் போகவில்லை.

(1) அம்புபட்டு விழுந்த அன்னம் இறந்தது.

(2) சரசு பாட்டுப் பாடினாள்.

(3) விருந்தினர் வீட்டுக்கு வந்தனர்.

(4) அவர் எமக்கு உதவி செய்தார்.

(5) நீ வந்ததை நான் கண்டேன்.

நம் நாட்டு இளஞ்சந்ததியினரின் நலன்கருதி நம் அரசு உங்களுக்கு வழங்கும் இந்நூலை அடுத்த ஆண்டும் உங்கள் சகோதரங்களுக்கு வழங்கத்தக்க முறையிற் கவனமாக வைத்துப் படிக்க.

St. Patrick's College

பாடசாலையின் பெயர் ......புனித பத்திரிசியார் கல்லூரி......

| | மாணவர் பெயர் | ஆண்டு | வகுப்பு ஆசிரியரின் ஆசிரியையின் கையொப்பம் |
|---|---|---|---|
| 1999 | | | |
| 2000 | J. Soy Matharam | 4 B | Baani |
| 2001 | | | |

4

90
75
165


දෙමළ - 4